வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 06 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 152 பக்கங்கள் : 16





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


## எரிபொருள் விலையில் மாற்றமில்லை!

கொழும்பு, ஜூன் 01

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்துக்கு ஏற்ப நேற்று மேற்கொள்ள திட்டமிடப் பட்டுள்ள எரிபொருள் விலை திருத்தம் குறித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த முறை மாதாந்த எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, லங்கா ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 274 ரூபாவாகவும், லங்கா சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 325 15

## பழைய அரசுகளைப் போன்று

# எங்கள் அரசுடன் விளையாடாதீர்!

### மகிந்த ஜயசிங்க எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 01

**உதய கம்மன்பில உள்ளிட்டோரை பழைய அரசாங்கங்களைப் போன்று இந்த அரசாங்கத்துடன் விளையாட முற்பட வேண்டாம் என எச்சரிக்கின்றோம். அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் அவர்களே பொறுப்பு கூறவேண்டும். அமைச்சர்கள்மீது குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அவை தொடர்பில் குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடளியுங்கள் என பிரதி தொழில் அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

2015 - 2019இல் கள்வர்களை கைது செய்வதாகக் கூறியே ரணில் - மைத்திரி அரசாங்கம் ஆட்சியமைத்தது. இறுதியில் இரு தரப்பும் ராஜபக்‌ஷர்களுடன் இணைந்தே செயற்பட்டனர்.

ஆனால் நாம் 15

## இலங்கையை சர்வதேசத்தில் உயர்த்தி வைப்பதே நோக்கம்!

### ஜனாதிபதி அநுரகுமார கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 01



குற்றங்கள் நிறைந்த நாட்டுக்குப் பதிலாக, நல்ல தொரு நாடாக இலங்கையைச் சர்வதேசத்தில் உயர்த்தி வைக்கும் கைவிடமுடியாத பொறுப்பை தாம் செய்து முடிப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்கிரியாகம சிறி சமாதி மகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்தே அவர் 15

## மருந்துகள் விநியோகத்துக்காக வெளிநாடுகளிடமிருந்து உதவி!

கொழும்பு, ஜூன் 01

நாட்டுக்கு மருந்துகள் சரியான முறையில் விநியோகிப்பதை உறுதிப்படுத்த வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்து நேரடியாக ஆதரவைப் பெறுவதற்கான சிறப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. அதற்கமைய மருந்து விநியோகச் சங்கிலியில் இடையூறுகள் குறைக்கப்படும் வரை, பற்றாக்குறையான மருந்துகளைப் 15

## புதிதாக ஆசியாவில் பரவிவரும் கோவிட் திரிபு இலங்கையிலும்!

கொழும்பு, ஜூன் 01

ஆசிய பிராந்தியத்தில் தற்போது பரவி வரும் கோவிட் திரிபு நாட்டிலும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்திய ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒமிக்ரோன் வைரஸின் துணை வகைகளான எல்.எவ். பொயின்ட் செவன் மற்றும் எக்ஸ்.எவ்.ஜி. என்ற திரிபால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் இந்த நாட்டில் பதிவாகி வருவதாக வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் நோய்கள் தொடர்பான வைத்திய நிபுணர் ஜூட் ஜயமஹா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல வைத்தியசாலைகளில் இருந்து பெறப்பட்ட உயிரியல் மாதிரிகள் குறித்து வைத்திய ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆராய்ச்சியின் மூலம் இது உறுதிப்படுத்தப் 15

## 2009இல் இலங்கை விடயத்தில் ஐ.நா. தவறிழைத்தது என உலகம் கூறியது!

### உயரதிகாரி டொம் பிளெச்சர் சுட்டிக்காட்டு

ஜெனிவா, ஜூன் 01

இலங்கை, ருவாண்டா, ஸ்ரெப்ரெனிகாவில் நாங்கள் (ஐ.நா.) உரிய தருணத்தில் செயற்படவில்லை, உரிய தருணத்தில் எச்சரிக்கை விடுக்கவில்லை என உலகம் பின்னர் தெரிவித்தது என ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான தலைவர் டொம் பிளெச்சர் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கான மே 14ஆம் திகதி உரையில் பிளெச்சர், காஸாவில் இனப்படுகொலையை தடுத்து நிறுத்துவதற்கு



பாதுகாப்புச் சபை முன் வரவேண்டும் என வேண்டுகோள் 15

## சீரற்ற வானிலையால் சேதமடைந்த வீடுகளுக்காக 1,000 மில்லியன் ரூபா!

கொழும்பு, ஜூன் 01

சீரற்ற வானிலை காரணமாக சேதமடைந்த வீடுகளுக்கு இழப்பீடு வழங்க ஜனாதிபதி 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பேரிடர் காரணமாக முழுமையாக சேதமடைந்த வீட்டுக்கு 2.5 மில்லியன் ரூபாவும், பகுதியளவு சேதமடைந்த வீடுகளுக்கு சேதத்தின் அளவிற்கேற்ப இழப்பீடு வழங்கப்படும் எனவும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கே. ஜி. தர்மதிலக தெரிவித்தார்.

பேரிடர் காரணமாக உயிரிழந்த ஒவ்வொருவருக்கும் ஒரு மில்லியன் ரூபாய் இழப்பீடு வழங்க நடவடிக்கை 15

## தரம் 1 அனுமதிக்கான மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது!

### இது ஆபத்தானது என்கிறார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜூன் 01

வடக்கில் ஒவ்வோர் ஆண்டும் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன. தரம் 1 அனுமதிக்காக வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது. இது எமக்கு ஆபத்தான நிலைமை. அனைவரும் இதனைக் கவனத்திலெடுக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், 'பரமானந்தம்' மலர் வெளியீடும் பாடசாலை அதிபர் க. வசந்தரூபன் தலைமையில் நேற்று சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் 15

## கொழும்பு மாநகர சபை ஆட்சியை சஜித் தரப்பு கைப்பற்ற முடியாது

### அமைச்சர் பிமல் சூளுரை

கொழும்பு, ஜூன் 01

சஜித் அணியினர் எந்த வழியாலும் கொழும்பு மாநகர சபையின் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையின் ஆட்சி தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 15

## கிளிநொச்சியில் வாள்வெட்டு; இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஜூன் 01

கிளிநொச்சி - பூநகரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

பூநகரி தம்பிராய் பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த இளைஞர்மீது அடையாளம் தெரியாதவர்களால் சரமாரியாக வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 15

## 76 வருடங்களாக செய்யாததை 6 மாதங்களில் செய்துள்ளோம்!

### கூறுகின்றது அநுர அரசு

கொழும்பு, ஜூன் 01

தற்போதைய அரசாங்கம் பெரிதாக எதையும் செய்யவில்லை என்று கூறுகின்றனர். ஆனால், 76 ஆண்டுகளில் அவர்களால் செய்யமுடியாத பல பணிகளை எமது அரசாங்கம் செய்துள்ளது என பிரதி அமைச்சர் டி. பி. சரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆட்சியாளர்கள் பொதுமக்களுக்கு 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டில் கசிப்பு உற்பத்தி, விற்பனை 60 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழில் நீண்டகாலமாக வீட்டில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டுவந்த நபர் ஒருவர் 600 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்புடன் பொலிஸாரால் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் - ஊரெழு பகுதியில் 40 லீற்றர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரின் வாக்குமூலங்களுக்கு அமைவாக சுதுமலை பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

மானிப்பாய் - சுதுமலை பிரதேசத்தில் நீண்ட நாட்களாக வீட்டின் சமையல் அறையில் கசிப்பு உட்பத்தி செய்துவந்த 36 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாரும் கோப்பாய் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து குறித்த நபரை கைது செய்தனர். இதன்போது, 600 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பு, உற்பத்திக்கு பயன் படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் ஹாஸ் சிலிண்டர் என்பன கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

குற்றப் பிரதேசமானது மானிப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதி என்பதால் சந்தேகநபர் சான்றுப் பொருட்களுடன் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (எ-05)

# பேராசிரியராக பதவி உயர்வு



யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட விரிவுரை யாளர் ஒருவர் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் ஒரு வரைப் பேராசிரியராகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக் கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுச் சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த பௌதிகவியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதர்சினி உபேந்திரனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

இவற்றின் படி, சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சுதர்சினி உபேந்திரன் பௌதிகவியலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (எ)

# நாடு திரும்பிய தமிழுரை கைது செய்தமை தவறு!

## சுமந்திரன், மனோ கண்டனம்

கொழும்பு, ஜூன் 01

தமிழ்நாட்டுக்கு அகதியாக சென்று நாடு திரும்பிய 74 வயதான சின்னையா சிவலோக நாதன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமைக்கு மனோ கணேசன் எம். பி, தமிழ் அரசின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் ஆகியோர் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து நாடு திரும்பியவர் பலாலி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து, அவர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த நடவடிக்கைக்கு பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம். பி. வெளியிட்ட கண்டன பதிவில்,


"இந்த நாட்டில் ஊழல் செய்தவர்களை சிறையில் அடைக்குமாறு கூறிய அவர், 400இற்கும் அதிகமான ஊழல் கோப்புகள் இருப்பதாகக் கூறிய தற்போதைய அரசாங்கம் அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும். சட்டத்தில் இடமிருந்தால் ஊழல்வாதிகளுக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

வெளிநாட்டிலுள்ள தமிழர்களை நாட்டுக்கு வரவழைத்து அவர்களை கைதுசெய்வது நியாயமா?" - என்று கூறியுள்ளார்.

இதேவேளை, எம். ஏ. சுமந்திரன் கூறுகையில்,

"குறித்த முதியவரிடம் நாடு திரும்புவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்கள் இருந்தும், சர்வதேச சட்டப்படி அவர் ஓர் அகதி என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் அவரை பிணையில் விடுவிக்க எதிர்ப்பு தெரிவித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவமானது நாடு திரும்புவதற்கு தயாராக இருக்கும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள், நாட்டுக்கு பயந்து வராமல் இருப்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகளா?", என்று கூறியுள்ளார். (ஐ)

# பிள்ளையானின் கட்சிக் காரியாலயத்தில் தோட்டாக்கள் உள்ளிட்ட பொருட்கள் மீட்பு



மட்டக்களப்பு, ஜூன் 01

பிள்ளையானின் கட்சிக் காரியாலயத்திலிருந்து தோட்டாக்கள் உள்ளிட்ட பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் மட்டக்களப்பிலுள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமைக் காரியாலயத்தை கொழும்பிலிருந்து சென்ற சி. ஐ. டியினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டு இரவு 11.00 மணிவரை தேடுதல் மேற்கொண்டனர்.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடந்த 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த நிலையில் அவர் கொழும்பில் வைத்து கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சந்திரகாந்தன் கடந்த ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் வைத்து கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினர் கைது செய்து, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 3 மாதகாலம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு, முதலாவது வாவிக்கரை வீதியில் அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமைக் காரியாலயத்தை விசேட அதிரடிப் படையினர் மற்றும் சி.ஐ.டியினர் மற்றும் நேற்று முற்பகல் 11.00 மணிக்கு முற்றுகையிட்டு சோதனை நடத்தினர்.

விசேட அதிரடிப்படையினர் மற்றும் சி.ஐ.டி. யினர் காரியாலயத்தின் நிலத்தை உடைத்து பல மணிநேரம் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிலையில், அங்கிருந்து 3 கையடக்கத் தொலைபேசிகள், ஒரு சாரதி அனுமதிப் பத்திரம், ஒரு கடவுச்சீட்டு, ஒரு ஐ பாட், கைத்துப்பாக்கி உறை, 9 மில்லிமீற்றர் ரக துப்பாக்கி தோட்டாக்கள் 6, ரிப்பிட்டர் துப்பாக்கியின் 5 வெற்றுத் தோட்டாக்கள் ஆகியவற்றை மீட்டுள்ளனர். (எ)

# நாட்டின் சட்டத்தின் கீழ்தான் தாயகம் திரும்பியவர் கைது

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க விளக்கம்

கொழும்பு, ஜூன் 01

சட்டபூர்வமற்ற வழிகள் ஊடாக நாட்டை விட்டு வெளியேறியவர்களை கைது செய்ய பயன்படுத்தப்படும் சட்டத்தின் கீழ்தான் தமிழ்நாடு அகதி முகாமிலிருந்து தாயகம் திரும்பியவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தனது சமூக ஊடக பதிவில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சட்டபூர்வமற்ற வழிகள் ஊடாக நாட்டை விட்டு வெளியேறியவர்களுக்கு எதிராக பயன்படுத்தப்படும் சட்டத்தின் அடிப்படையிலேயே தமிழக அகதி முகாமிலிருந்து நாடு திரும்பிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார் தொடர்புபட்டவர்கள் இது குறித்து செயல்பட்டிருந்தால் யுத்தத்தின் பின்னர் இந்த சட்டத்தை மாற்றியிருக்கலாம்.

அமைச்சர் ஆனந்த விஜய பாலவுடன் கதைத்தேன். அவர் இந்த சட்டத்தை மாற்றுவதாக தெரிவித்துள்ளார்.

இது அரசாங்கத்தின் கொள்கையில்லை. நாட்டின் பழைய சட்டமொன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

நானும் அமைச்சர் சந்திரசேகரும் 2007, 2008 இல் அந்த அகதி முகாம்களுக்கு பயணம் மேற்கொண்டிருந்தோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

# உணவு கையாளும் நிலையங்கள் உரிய அனுமதி பெற வேண்டும்

முல்லைத்தீவு, ஜூன் 01

உணவு கையாளும் நிலையங்கள் அனைத்தும் பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 09 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

எனவே, இதற்கான முன்னேற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்திலுள்ள உணவு கையாளும் வியாபார நிலையங்களுக்கான அறிவுறுத்தல் ஒன்றை வற்றாப்பளை பொதுச் சுகாதார பரிசோதகர் தகவல் விடுத்துள்ளார்.

உணவு கையாளும் நிலையங்கள் (ஐஸ்கிறீம் கடை, ஐஸ்கிறீம் வாகனம், பூந்தி இனிப்பு வகைகள் மற்றும் மிக்சர் கடைகள்) அனைத்தும் தத்தமது பிரதேச உள்ளூராட்சி சபைகளின் அனுமதியை பெற்றிருத்தல் வேண்டும்.

ஐஸ்கிறீம், உணவகங்கள், தேநீர், பூந்தி இனிப்பு, மிக்சர் சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனைவரும் மருத்துவச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனுமதி பெற்ற ஐஸ்கிறீம் கடைகளில் மாத்திரமே ஐஸ்கட்டிகளை கொள்வனவு செய்தல் வேண்டும். அத்துடன் அதற்கான பற்றுச் சீட்டை தம் வசம் வைத்திருத்தல் வேண்டும்.

உணவகத்துக்கும் சர்பத் கடைகளுக்குமான உரிமையாளர்கள் எதிர்வரும் 07 ஆம் திகதி சனிக்கிழமை 0 4.00 மணிக்கு வற்றாப்பளை பொதுச் சுகாதார பரிசோதகர் உற்சவ கால அலுவலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் கட்டாயம் பங்குபற்றுதல் வேண்டும்.

காவடி உரிமையாளர்கள் 08 ஆம் திகதிக்கு முன்னர் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அறிவித்து அவரின் அனுமதியைப் பெற்று கொள்ள வேண்டும்.

உணவு கையாளும் நிலையங்கள் அனைத்தும் பொதுச் சுகாதார பரிசோதகரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிகரெட், புகையிலை, மதுசாரம் ஆலய வளாகத்தினுள்ளே வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தே.ம.சக்திக்கும் ஜே.வி.பிக்கும் எந்தவித முரண்பாடும் இல்லை

## அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி



கொழும்பு, ஜூன் 01

தேசிய மக்கள் சக்திக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் முரண்பாடு தீவிரமடைந்துள்ளதாகவும் அதனால் வெகுவிரைவில் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படவுள்ளதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் கருத்து முற்றிலும் பொய்யானது. அரசியலில் வங்குரோத்து நிலையடைந்துள்ளவர்களின் குற்றச்சாட்டுக்களுக்கு அவதானம் செலுத்த போவதில்லை என்று கைத்தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

உப்பு பிரச்னை தற்போது முடிவடைந்துள்ள நிலையில் எதிர்க்கட்சியினர் அமைச்சரவை மாற்றத்தை கையில் எடுத்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்திக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் எந்தவித முரண்பாடுகளும் கிடையாது. பொதுவான இணக்கப்பாட்டுடன் செயல்படுகிறோம்.

அமைச்சரவை மாற்றம் மற்றும் பிரதமர் பதவியில் மாற்றம் என்று எதிர்க்கட்சிகள் குறிப்பிட்டுக் கொள்வது முற்றிலும் அடிப்படையற்றது.

அமைச்சரவையில் சகல உறுப்பினர்களும் கூட்டுப் பொறுப்புடன் செயல்படுகின்ற நிலையில் எந்தவித கருத்து முரண்பாடுகளும் ஏற்படவில்லை.

ஊழல் மோசடிக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவோம்.

கடந்த கால அரசாங்கங்கள் ஊழல்வாதிகளை பாதுகாத்தது. எமக்கும் ஊழல்வாதிகளுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது.

நீதிமன்றம் மற்றும் விசாரணை நிறுவனங்கள் சுயா தீனமான முறையில் செயல்படுகின்றன. நீதிமன்றம் மற்றும் விசாரணை நிறுவனங்களின் செயல்பாடுகளில் அரசாங்கம் தலையிடவில்லை.

எனவே, ஊழல்வாதிகள் கைது செய்யப்படுவதை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட வேண்டாம் - என்றார். (எ)



# வர்த்தக நிலையம் தீக்கிரை

மட்டக்களப்பு, ஜூன் 01

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி நகரில் நேற்றுச் சனிக்கிழமை நண்பகல் வர்த்தக நிலையத்தில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

காத்தான்குடி கடற்கரை வீதியிலுள்ள பல்பொருள் அங்காடி வர்த்தக நிலையம் ஒன்றினுள் ஏற்பட்ட பாரிய தீ பரவல் காரணமாக வர்த்தக நிலையம் முற்றாக எரிந்து சாம்பலாகியது.

இதனால் பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் மற்றும் காத்தான்குடி நகரசபை தீயணைப்பு பிரிவினர் குறித்த இடத்துக்கு விரைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த போதும் வர்த்தக நிலையம் முற்றாக எரிந்தது.

அங்கிருந்த பொருட்கள் பொலிஸார் மற்றும் பொது மக்களால் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சிறுவர்களின் பாதுகாப்புக்காக இணைந்து செயல்பட வேண்டும்

## அமைச்சர் சரோஜா சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 01

நாட்டில் உள்ள சிறுவர்களின் பாதுகாப்பிற்காக அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் தெரிவித்தார்.

அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

சிறுவர்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் ஏற்படும் அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் பாதுகாக்க பல்துறை பொறிமுறை ஒன்றை நிறுவும் நோக்கத்துடன் மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு செயல்பட்டு வருகிறது.

சிறுவர்களுக்கான பாதுகாப்பான சமூகத்தை உருவாக்குவதற்கு இந்த பன்முகத்தன்மை கொண்ட பொறிமுறையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும். மேலும் இந்த பன்முகத்தன்மை கொண்ட பொறிமுறையை நிறுவதற்கு ஜனாதிபதி, சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சர், நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் ஆகியோர் பன்முகத்தன்மை கொண்ட பொறிமுறையை நிறுவ உத்தரவிட்டனர். அமைச்சர்களால் பெறப்பட்ட பயனுள்ள அவதானிப்புகள் மற்றும் திட்டங்கள் குறித்தும் எமது அரசாங்கத்தின் ஊடாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை, துஷ்பிரயோகம் மற்றும் அனைத்து வகையான வன்முறைகளிலிருந்தும் சிறுவர்களை பாதுகாக்க அறிமுகப்படுத்தப்பட்ட இந்த பன்முகத்தன்மை கொண்ட பொறிமுறையின் நிர்வாகம், செயல்முறை மற்றும் தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் தொடர்பிலும் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் விளக்கினார். இந்த பொறிமுறை எவ்வாறு செயல்படுகிறது என்பதை அந்த நிறுவனங்களின் தலைவர்கள் தெளிவுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

(எ)

*36 மணி நேரத்தில் மட்டும்*

# 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்தடை முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 01

நாடளாவிய ரீதியில் சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 55 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்தடை தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் தம்மிக்க விமலரத்ன தெரிவிக்கையில்,

வியாழக்கிழமை (29ஆம் திகதி) இரவு 08.00 மணி முதல் நேற்றுச் சனிக்கிழமை காலை 08.00 மணி வரையான 36 மணி நேரத்தில், மின் தடை தொடர்பில் மின்சார சபைக்கு 55, 940 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 17, 460 முறைப்பாடுகள் சீர் செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் 31 வீதமான மின்தடைகள் சீர்செய்யப்பட்டுள்ளன - என்றார்.

(எ)

# சுவாமி சிலையை அவமதித்து தமிழ் இளைஞன்மீது தாக்குதல்

## அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மனோ எம்.பி. வலியுறுத்தல்

கொழும்பு, ஜூன் 01

ஆலய சிலை பீடத்தில் பாதணியுடன் காலை தூக்கி வைக்க வேண்டாம் என்று சொன்ன, தமிழ் இளைஞனை "நீ கும்பிடுவது சிலையின் தலையா? காலையா? சுவாமி தலையிலா? காலை வைத்தோம்" என கொச்சை தமிழில் திட்டி அநுர, சந்துன் என்ற இரண்டு தோட்ட வெளிக்கள அலுவலர்கள் தாக்கியுள்ளனர் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இந்த தகவலை அவிசாவளை புவக்பிட்டிய அமைப்பாளர் சசிகுமார் என் கவனத்துக்கு கொண்டு வந்த நிலையில் இதுபற்றி உறுதியான மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு அவிசாவளை பொலிஸூக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த குணரத்ன, நிலைய பொறுப்பதிகாரி ஜெயலத், இளநிலை அதிகாரி ராஜரத்ன ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளேன். அவர்களும் உறுதியான நடவடிக்கை எடுப்பதாக எனக்கு உறுதியளித்துள்ளனர் என்றும் மனோ எம். பி. குறிப்பிட்டுள்ளார்.

தற்சமயம் காயமடைந்த கமலநாதன் இமேஷ்நாதன் அவிசாவளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவரது உடலின் உயிர்நிலை பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. கமலநாதனை தாக்கிய சந்தேக நபர்கள் இருவரும் மிகவும் சூட்சுமமான முறையில் தாமும் தாக்குதலுக்கு உள்ளானதாக கூறி, அதே அவிசாவளை மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதாக கூறி தங்கியுள்ளனர். இது பற்றியும் நான் பொலிஸ் அதிகாரிகளிடம் கூறியுள்ளேன் என்று மனோ கணேசன் தெரிவித்தார்.

(எ)

# கொழும்பில் வீடமைப்பு நிர்மாணக் கண்காட்சி



கொழும்பு, ஜூன் 01

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சபை ஏற்பாடு செய்த 20 ஆவது சர்வதேச வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கண்காட்சியை நேற்று சனிக்கிழமை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க ஆரம்பித்துவைத்தார்.

இலங்கையில் நடைபெறும் பிரதான சர்வதேச வீடமைப்பு மற்றும் நிர்மாணக் கண்காட்சி, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெறுகிறது. இந்தக் கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை நிறைவடைகிறது.



சுமார் 280 காட்சிக் கூடங் களைக் கொண்ட இந்தக் கண் காட்சியானது, வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறையில் முக்கிய தரப்பினர்களை ஒன்றிணைக்கும் ஒரு தளமாகும் என்பதால் இதன் ஊடாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும் வர்த்தக வாய்ப்பு களைப் பெறவும் புதிய நிர்மாணங்கள் மற்றும் நவீன தொழில் நுட்ப முறைகள் பற்றிய புரித லைப் பெறவும் வாய்ப்பு கிட்டும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயேச்சை குழுக்களுடன் பேரம் பேசும் அரசாங்கம்

## ஜகத் விதான எம். பி. சாடல்

களுத்துறை, ஜூன் 01

தேசிய மக்கள் சக்தி, சுயேச்சை உறுப்பினர்களுக்கு பணம் கொடுத்து அவர்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள மூன்று சுற்றுப் பேச்சுக்களை முன்னெடுத்தது. ஆனால், களுத்துறை மாவட்டம் மத்துமக தொகுதியின் சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த நால்வரும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

மத்துகம தொகுதியில் தேசிய மக்கள் சக்தியிலிருந்து 13 உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 10 உறுப்பினர்களும் சுயேச்சை குழுக்களிலிருந்து நால்வரும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

இவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளனர். எனவே, தற்போது ஐக்கிய மக்கள் சக்தியில் 14 உறுப்பினர்கள் உள்ளனர்.

இதற்கமைய சுயேச்சை குழுவின் தலைவர் கசுன் முணசிங்கவை தவிசாளராக நியமிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஐக்கிய மக்கள் சக்தி முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது. அடுத்து இந்த நாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியே ஆட்சியமைக்கும்.

ஒரு சில மாதங்களில் 23 இலட்சம் வாக்குகளை இழந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் ஒருபோதும் மீண்டும் இந்த நாட்டில் ஆட்சியமைக்க முடியாது- என்றார். (எ)

# போதைப்பொருட்களுடன் மேலும் 467 பேர் மாட்டினர்

கொழும்பு, ஜூன் 01

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 467 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஹெரோயின் போதைப்பொருளுடன் 148 பேரும் ஐஸ் போதைப்பொருளுடன் 155 பேரும் கஞ்சாவுடன் 144 பேரும் கஞ்சா செடிகளுடன் 03 பேரும் போதை மாத்திரைகளுடன் 17 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 195 கிராம் 79 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் 257 கிராம் 596 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளும் 02 கிலோ 768 கிராம் 179 மில்லி கிராம் கஞ்சா போதைப்பொருளும் 17388 கஞ்சா செடிகளும் 295 போதை மாத்திரைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.(எ)

# கொழும்பில் கார் மீது முறிந்து விழுந்த மரம்



கொழும்பு, ஜூன் 01

கொழும்பு சிற்றி சென்ரர் வர்த்தக வளாகத்துக்கு அருகில் வீதியில் பயணித்த கார் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.

மரம் முறிந்து விழுந்ததால் காரின் முன் பகுதியில் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சீரற்ற வானிலை காரணமாக பல்வேறு பிரதேசங்களில் மரங்கள் முறிந்து விழுவதால் வாகனங்களை ஓட்டும் சாரதிகள் மிகவும் கவனமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (எ)

# இளம் குடும்ப பெண் கொலை பொலிஸார் தீவிர விசாரணை

பெரிய நீலாவணை, ஜூன் 01

அடித்து தாக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்ட குடும்பப் பெண்ணின் சடலம் பெரிய நீலாவணை பொலிஸாரால் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக அம்பாறை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விஷ்ணு கோயில் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் தனித்திருந்த 38 வயது, இரண்டு பிள்ளைகளின் தாயான திருமதி மனோதர்ஷன் விதுஷா என்ற குடும்பப் பெண்ணே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

குறித்த பெண்ணின் கழுத்து மற்றும் தலை உள்ளிட்ட பகுதியில் காயங்கள் ஏற்படக் கூடிய வகையில் அடித்து தாக்கப்பட்டு கொடூரமாக கொலை செய்யப்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

குடும்பப் பெண்ணின் கணவர் வெளிநாடு ஒன்றில் தொழில் நிமிர்த்தம் தங்கியுள்ளதாகவும்



சம்பவம் இடம்பெற்ற வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரிவி கமராவின் காணொலிகளை சேமிக்கும் கருவி கொலைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அஸார் சம்பவ இடத்துக்கு சென்று மேற்பார்வை செய்திருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் அம்பாறை தடயவியல் பொலிஸார் மோப்பநாய் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொலைச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-01)

# ‘லொக்கு பெட்டி’ க்கு சொந்தமான துப்பாக்கி, தோட்டா கைப்பற்றல்



கொழும்பு, ஜூன் 01

பெலரூஸ் நாட்டில் வைத்து கைது செய்யப்பட்டு கடந்த 04ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பாதாள உலக கும்பலைச் சேர்ந்த ‘லொக்கு பெட்டி’ என அழைக்கப்படும் சுஜீவ ருவன் குமார டி சில்வா என்பவருக்கு சொந்தமான வெளிநாட்டு துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் என்பன மேல்மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

லொக்கு பெட்டியிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் ஊடாக கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் களுத்துறை - வெலிபென்ன தர்கா நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் போத்தல் ஒன்றுக்குள் வைத்து குழிதோண்டி புதைக்கப்பட்டிருந்த வெளிநாட்டு துப்பாக்கி மற்றும் 5 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேல் மாகாணத்தின் தெற்கு பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# நீரில் மூழ்கி சிறுவன் பலி

அநுராதபுரம், ஜூன் 01

அநுராதபுரம் மாவட்டத்தில் மொரகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட முரியாகடவல பகுதியில் உள்ள வாவியில் நீராடிக்கொண்டிருந்த 10 வயது சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது.

களுத்துறை, மொரந்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 10 வயது சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

சிறுவன் தனது உறவினர் வீட்டுக்குச் சென்ற நிலையில் வாவியில் குளித்துக்கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கினார்.

இதனையடுத்து பிரதேச வாசிகள் சிலர் இணைந்து சிறுவனை காப்பாற்றி, மருத்துவமனையில் சேர்த்த நிலையில் சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார் மரத்தில் மோதி விபத்து



பொலநறுவை, ஜூன் 01

பொலநறுவை, பக்கமுனா - கிரிதலே வீதியில் கார் வேகக் கட்டுப்பாட்டையிழந்து மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்றது.

கார் சாரதி திடீரென உறங்கியதே இந்த விபத்துக்கு காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# வாள்வெட்டுத் தாக்குதலில் 22 வயது இளைஞன் கொலை

இரத்தினபுரி, ஜூன் 01

இரத்தினபுரி - எஹெலியகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலுள்ள ரயில் கடவைக்கு அருகில் வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்ததாக எஹெலியகொட பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

22 வயது இளைஞனே இவ்வாறு கொலை செய்யப்பட்டார். சம்பவதினத்தன்று, வன்முறைக் கும்பல் ஒன்று மூவரை வாளால் வெட்டி தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் எஹெலியகொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றைய இருவரும் மேலதிக சிகிச்சைக்காக இரத்தினபுரி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
01.06.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசாங்கத்துடன் பேசவேண்டிய அவசியம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஒரு பிரதான எதிரியாகக் காண்பித்து, உள்ளூராட்சித் தேர்தலில் ஒப்பீட்டிப்படையில் தமிழ்த் தேசிய கட்சிகள் வெற்றியை பெற்றிருந்தன - எனினும் தேசிய மக்கள் சக்தி வடக்கு கிழக்கில் பெரியளவில் பின்னடைவை சந்திக்க வில்லை.

அவர்களைப் பொறுத்தவரையில் பூச்சியத்தில் இருந்தவர்கள், பெரியளவில் முன்னேற்றமடைந்திருக்கின்றனர். எனவே தேசிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கில் தோல்வியடையவில்லை. தமிழ் கட்சி கள் இந்த விடயத்தை எந்தளவு புரிந்து கொண்டிருக்கின்றன அல்லது புரிந்து கொள்ள முயற்சிக்கின்றன என்பது கேள்வியாகும்.

நல்லாட்சி அரசாங்கத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டது. அந்த அடிப்படையில் சில விடயங்களில் ஏற்படும் என்பதான நம்பிக்கை விதைக்கப்பட்டது. ஆனால், அவைகள் எதிர்பார்த்தவாறு இடம்பெறவில்லை. பின்னர் கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரத்தை கைப்பற்றியதைத் தொடர்ந்து அரசாங்க எதிர்ப்பு அடிப்படையில் விடயங்கள் மீண்டும் அணுகப்பட்டன.

ரணில் எதிர்பாராதவிதமாக அதிகாரத்தை பொறுப்பேற்ற பின் னணியில் மீண்டும் அரசாங்கத்துடன் பேசுதல் என்னுமடிப்படை யில் விடயங்கள் அணுகப்பட்டன. ஆனால், தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் அதிகாரத்தை கைப்பற்றிய பின்னணியில் மீண்டும் அரசாங்க எதிர்ப்புப் பிரசாரங்களை தமிழ் கட்சிகள் கூட்டாக கையிலெடுத்தி ருக்கின்றன.

ஆனால், இங்குள்ள பிரச்னை என்னவென்றால், தமிழ் கட்சிகள் என்னதான் சுலோகங்களை முன்வைத்தாலும், தங்களுக்குள் உத்த மர்கள் யார் என்று சண்டையிட்டுக் கொண்டாலும் கூட, இறுதியில் பேச்சுவார்த்தை மேசைக்கு சென்றுதான் ஆகவேண்டும் - அதனை விட்டால் அரசியலை கையாள்வதற்கு வேறு வழியில்லை. இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய கட்சிகள் குறிப்பாக இலங்கை தமிழ் அரசு கட்சி கரிசனை கொள்ள வேண்டும்.

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய 70 வயதை கடந்த ஒருவர், பலாலி விமான நிலையத்தில் வைத்து, கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். பல வருடங்களுக்கு முன்னர் அவர் நாட்டைவிட்டு வெளியேறிய விட யத்தை ஒரு குற்றமாக முன்வைத்தே அவர் கைது செய்யப்பட்டிருக் கின்றார்.

இவ்வாறான விடயங்களில் கொள்கை சார்ந்த இணக்கப்பாடு அவசியம். அரசாங்கத்துடன் இது தொடர்பில் பேச வேண்டும். கைது இடம்பெற்ற பின்னர் இது தவறு என்று கூறுவதற்கு கட்சிகள் தேவை யில்லை. இவ்வாறான விடயங்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதை தடுக்க வேண்டுமாயின், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் முறையான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும்.

ஈழத் தமிழ் மக்களுக்கு தனியான ஒரு தேசிய இயக்கம் தேவை யென்னும் அடிப்படையில் இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப் பட்ட காலத்திலிருந்து, தனித்துவமான அரசியல் தொடர்பில் பேசினா லும் கூட, ஆட்சியாளர்களோடு பேசுவதையே பிரதான அரசியல் அணுகுமுறையாக கைக்கொள்ளப்பட்டது. எனவே விருப்பு வெறுப்புக் களுக்கு அப்பால், தேசிய மக்கள் சக்தி பலமானதோர் அதிகார நிலையில் இருக்கின்றது. இன்றைய சூழலில் தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் பேச வேண்டியது அவசியம். அதன் மூலம்தான், பிரச்னைகளுக்கான தற்காலிக தீர்வுகளையாவது பெற முடியும். இந்தியாவிலிருந்து நாடு திரும்ப விருப்புவாகள் தொடர்பில் அரசாங்கத்துடன் பேசி, கொள்கை சார்ந்து இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது அவசியம்.

# இந்திய - இலங்கை இடையே உறவு ஆழமாக பின்னிப் பிணைந்துள்ளது

## பிரதமர் ஹரிணி அமரசூரிய



கொழும்பு, ஜூன் 01

இலங்கைக்கும் இந்தியா வுக்கும் இடையிலான உறவு, நாகரிகம், வரலாறு, மதம், மொழி மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் ஆழமா கப் பின்னிப் பிணைந்துள்ள மையானது கடந்த கால, நிகழ்கால மற்றும் எதிர்கால ஒத்துழைப்பைக் கட்டியெ ழுப்புவதற்கான அடித்தளங்க ளாக மாறியுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரி வித்துள்ளார்.

சுவாமி விவேகானந்தர் கலாசார மத்திய நிலையத் தினால் ஏற்பாடு செய்யப் பட்ட இந்திய கலாசாரம் தொடர்பான சபையின் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்

அவர் மேலும் தெரிவிக் கையில்-

1998 ஆம் ஆண்டு கொழும் பில் ஸ்தாபிக்கப்பட்ட சுவாமி விவேகானந்தர் கலாசார மத் திய நிலையமானது இலங்கை ணக இந்தியாவுக்கிடையே யான கலாசாரம், பரிமாற்றம், சகோதரத்துவம், நட்பு போன்றவற்றுக்கு சிறந்த வொரு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

கலாசாரம் ரீதியான வேலைத்திட்டங்களுக்காக வருடாந்தம் 300 இற்கும் அதிகமான இலங்கையர்கள் இந்தியாவுக்கு செல்கின்றனர்.

இந்த மத்திய நிலைய மானது இரு நாட்டு மக்க ளுக்கு இடையிலான உறவு களை வலுப்படுத்துவதற்கு உதவுகின்றது.

கடந்த இரண்டு வருடங் களில் மாத்திரம் இலங்கை யில் இருந்து 6 சுற்றுலாக் குழுக்கள் இந்தியாவுக்கு சென்றுள்ளன.

இதன்மூலம், கலாசார, ராஜதந்திர, எல்லையை கடந்து, அரசியலை மீறி உறவுகளை வலுப்படுத்துவ தற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

இலங்கை மற்றும் இந்தி யாவுக்கு இடையிலான வர லாறு, மதம், மொழி மற்றும் கலாசாரம் ஆகிய துறைகள் பின்னி பிணைந்துள்ளன-என் றார். (அ)

## 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 01

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 5 மாவட்டங் களுக்கு முதலாம் நிலை மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ மற்றும் நோர்வூட் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும், கேகாலை மாவட்டத்தின் அரநாயக பிரதேச செயலா ளர் பிரிவிற்கும், கண்டி மாவட்டத்தின் கங்கஇஹல கோரலே பிரதேச செயலா ளர் பிரிவுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின் கிரியெல்ல பிரதேச செயலாளர் பிரிவுக் கும், காலி மாவட்டத்தின் பத்தேகம பிரதேச செயலா ளர் பிரிவுக்கும் இந்த மண் சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## ரஷ்ய தூதுவர்-சுகாதார அமைச்சர் சந்திப்பு

கொழும்பு, ஜூன். 01

இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவான் எஸ். ஜகாரியன் மற்றும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோருக்கிடையில் சந் திப்பொன்று இடம்பெற்றுள் ளது.

இதன்போது ரஷ்ய சுகா தார அமைச்சர் இந்த ஆண்டு இலங்கைக்கு விஜயம் மேற் கொள்வதற்கு விருப்பம் தெரி வித்ததாகவும் ரஷ்யத் தூது வர் குறிப்பிட்டார்.

மக்களுக்குத் தரமான சுகாதார சேவைகளை வழங்குவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் திட்டங்க ளுக்கு ரஷ்ய அரசாங்கம் தொடர்ந்தும் தமது ஆத ரவை வழங்கும் எனவும் அவர் கூறினார். (அ)

## போதைப்பொருட்களுடன் சுன்னாகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 01

சுன்னாகத்தில் ஹெரோ யின் மற்றும் ஐஸ் போதைப் பொருட்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸார் தெரி வித்தனர்.

சுன்னாகம் பொலிஸா ருக்கு கிடைக்கப்பெற்ற இரக சிய தகவலின் அடிப்படை யில் நேற்றுக்காலை வீடொன்றை சுற்றி வளைத்து சோதனை நடத்திய போதே இந்த நபர் கைதுசெய்யப்பட் டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 15 கிராம் ஹெரோயின் மற்றும் 2 கிராம் ஐஸ் போதைப் பொருட்களை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபர் ஏற்கனவே போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டு நீதிமன் றில் வழக்கு ஒன்று நிலுவை யில் உள்ளமை விசாரணை யில் தெரியவந்துள்ளது.

மேலும், இவர் சுன்னாகம் பகுதியில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த வர் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணை களில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து சுன்னாகம் பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக்கவலையை மாற்றுவது எளிது

முனைவர் தென்காசி கணேசன்

தினம் நான்கு கிலோ மீட்டர் நடந்தால், உடல் நலத்துடன், மனக் கவலைகளும் மறைய வாய்ப்பு உண்டு - இது செய்தி.

எனக்கிருக்கும் கவலைகளுக்கு, கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீர் வரை நடந்தால் கூட, என் கவலைகள் மறையுமா என்பது சந்தேகம்தான்.

இந்த நகைச்சுவை துணக்கு, வாட்சப்பில் வந்தது.

உண்மைதான்! 'கவலை இல்லாத மனிதன்' என்பது திரைப்படத்தின் அல்லது கதையின் தலைப்பாக வேண்டுமானால் இருக்கலாம். உண்மையில் வாழ்க்கையில் கவலை இல்லாதவர் என்று யாரும் கிடையாது.

கவலை, பிறக்கும்போதே, தாய்ப்பாலுடன் உள்ளே புகுந்து விடுகிறது. ஆவரவர்கள் நிலைக்கேற்ப, வயதுக்கேற்ப, கவலைகள். இன்னும் சொல்லப்போனால், கவலைகள் ஒவ்வொருவர் கைகளிலும் அழியாத ரேகைகளாய் இருக்கின்றன என்றால் மிகையாகாது. அளவு வேண்டுமானால் வேறுபடலாம்.

பாரதி,

நின்னைச் சரண் அடைந்தேன் - கண்ணம்மா
நின்னைச் சரண் அடைந்தேன்
என்னைக் கவலைகள் தின்னத்தகாதென்று
நின்னைச் சரண் அடைந்தேன்

என்பான்.

கவலைகள் அவனைத் தின்று விடும்போல் இருக்குமாம். பாவம்! சுற்றிலும் எத்தனை முள்வேலிகள் அவனுக்கு? ஆட்சியாளர்கள் துரத்தல், அச்சுறுத்தல் பணி செய்யமுடியாத அளவு நேர்மையும், ரௌத்ரமும் கையில் காசு கிடையாது, குடும்பம் ஒருபுறம் மண்ணின் மீது, அறியாத மக்களின் மீது கவலை, கோபம், ஆத்திரம் இறுதியில், கடவுளிடம் கோபம், சோகம், வருத்தம், நிறைந்த வேண்டுதல்கள்.

மனக்கவலை மாற்றல் அவ்வளவு எளிதல்ல. மிக சுலபமாகப் பேசலாம் எழுதலாம் அறிவுரை கூறலாம் ஆனால், நெஞ்சில் தைத்த முள்ளாக, கவலைகள் ஒவ்வொருவர் மனதிலும், இருந்து கொண்டேதான் இருக்கின்றன.

இளம் வயதிலேயே, மறைந்துவிட்ட அற்புதக் கவிஞன், நெல்லையை சேர்ந்த கவிஞர் பூலாங்குளம் மாயவனாதன்,



கவலைகள் கிடக்கட்டும் மறந்துவிடு, காரியம் நடக்கட்டும் துணிந்து விடு, என்கிறார்.

கண்ணதாசன், 'அழகைக் காட்டும் கண்ணாடி, மனத்தைக் காட்டக் கூடாதா' என்று கேட்கிறார். மனது இப்படித்தான் என தெரிந்தால், கவலைகள் வராது என்கிறார். 'நினைக்க தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா' என்றும் கேட்கிறார்.

மறதி எல்லாருக்கும் இறைவன் அளித்த வரப்பிரசாதம். என்றோ நடந்தது நினைவிலேயே இருந்தால், என்றும் அமைதி இல்லை. கவலைகள்தான் மனதை ஆக்கிரமிக்கும்.

விவேகானந்தர், ' மனத்தை விரிவாக்கு. மனத்தின் விரிவு வாழ்வு மனத்தின் குறுகல் மரணம்' என்பார்.

உலகத்தையே ஜெயிக்க நினைத்த பிரான்ஸ் மாவீரன் நெப்போலியன் கடைசிக் காலத்தில் பிரிட்டனிடம் தோல்வி அடைந்தார். தோல்வி அடைந்த நெப்போலியனை பிரிட்டிஷ் ராணுவம் சிறைப்பிடித்து ஆப்பிரிக்க தனிச்சிறையில் தனிமையில் வைத்தது. சிறையில், மன உளைச்சலில் அவரின் கடைசிக் காலம் கழிந்தது. அவரைப் பார்க்க வந்த அவரின் நண்பர் ஒருவர் அவரிடம் ஒரு சதுரங்க அட்டையைக் கொடுத்து, "இது உங்களின் சிந்தனையைச் செயல்பட வைக்கும், தனிமையைப் போக்கும்" என்று கூறி அவரிடம் கொடுத்தார். ஆனால் சிறைப் படுத்தி விட்டார்களே என்ற மன உளைச்சலில் கவலையில் இருந்த மாவீரனுக்குச் சிந்தனை செயல்படாமல், அதன் மீது கவனம் போகவில்லை. சிறிது காலத்தில் இறந்தும் போனார்.

பிற்காலத்தில் பிரான்ஸ் அருங்காட்சியகம் மாவீரன் நெப்போலியனிடம் இருந்த சதுரங்க அட்டையை ஏலம் விட அதை ஆய்வு செய்த போது அந்த அட்டையின் நடு பக்கத்தில் சிறிய அளவில் ஒரு குறிப்பு இருந்தது. அதில் அந்த சிறைச்சாலையில் இருந்து தப்பிச் செல்வதற்கான வழியை அந்த குறிப்பு சொல்லி இருந்தது. ஆனால், மன உளைச்சலும், பதற்றமும் அவரின் சிந்தனையைச் செயல்படாமல் ஆக்கி வைத்தது.

உறுதியான சிமெண்ட் தரையையும், மரப்பெட்டியையும் தன் கூர்மையான பற்களாலும், நகத்தாலும் எலி குடைந்து ஓட்டை போடும். அதே மரத்தால் செய்யப்பட்ட எலிப்பொறியில் சிக்கிக் கொண்டால், அதற்கு ஏற்படும் மன உளைச்சலாலும், பதற்றத்தாலும், பொறியை உடைக்கும் வழியை விட்டுவிட்டு அந்தப் பொறியின் பின்னால் இருக்கும் கம்பிக்கு முன்னாலும் பின்னாலும் பதற்றத்துடன் சென்று சிந்தனை செய்யாமல் மனிதர்களிடம் மாட்டிக்கொண்டு விடும்.

மாவீரனுக்கும் சரி, சாதாரண எலிக்கும் சரி, பதற்றமும் மன உளைச்சலும், கவலையும் அவர்களின் சிந்தனையைச் செயல்படாமல் வைத்து முன்னேற்றத்துக்கான வழியை அடைத்து விடுகிறது.

பகவத் கீதையில், கண்ணன் கவலை ஒரு மனிதனின் மனத்தைத், தூசு, கண்ணாடியை மறைப்பதுபோல மறைக்கிறது என்கிறான். எவ்வளவுதான் கவலைகள் இருந்தாலும், 'இதுவும் கடந்து போகும்' என்ற மனப்பான்மையே, கவலைகளைப் போக்கும் அருமருந்தாகிறது. நிச்சயம் இரவுக்குப் பகல் உண்டு என்ற கவிஞனின் வரிகள் உண்மைதானே!

பூப்போன்ற உள்ளத்திலும் முள் இருக்கும் உலகம் இது. அதிலிருந்து எப்படி விலகுவது, அதை உணர்வது என்பதுதான் அறிதலும், புரிதலும். அறிவு அற்றம் காக்கும் கருவி என்கிறார் வள்ளுவர்.

கவலைப் படுவதாலோ, கண்ணீர் விடுவதாலோ, பிரச்சனைகள் தீரப் போவதில்லை. அதனால் தான், சரணாகதியை மருந்தாக கூறுகிறார்கள். பாரதியும்கூட, 'நின்னை சரண் அடைந்தேன்' என்கிறான்.

கவலைகளை மனத்தில் ஏற்ற ஏற்ற, அது உடலை, மனத்தை அடைப்பாய் அடைத்துவிடும். வாழ்வை இறைவன் பாதங்களில் ஒப்படைத்துக் கவலையின்றி வாழ்தலே சிறப்பு.

"கவலை" என்பதை வலையாகப் பின்ன விடாமல் இருக்க, அந்த வார்த்தையில் உள்ள "வ"" என்ற எழுத்தை எடுத்து விட்டால், கலை மீதம் இருக்கிறது. கவலை, கலை ஆகிவிடும்! கலை என்பது இசை உள்ளிட்ட பொழுது போக்குகளைக் காட்டும். மனம் மாறும் மகிழ்ச்சியை நாடும். ●

## இந்தவார ராசிபலன் 01.06.2025 - 07.06.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 18
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சஷ்டி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் குடும்பத்தில் பல புதிய திருப்பங்கள் ஏற்படும். உங்கள் உடன் பிறப்புக்கு இது வரை தடைப்பட்டு வந்த காரியங்கள் கை கூடிவரும். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலா பமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். மனைவிக்கு எதிர்பாராத விதமாக சொத்துக்களோ, பணவ ரவோ ஏற்படும். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் எடுத்த முயற்சிகள் அனைத்திலும் முன்னேற்றம் அடைவீர்கள். எதிர்பார்த்த அளவு போதுமான வருமானங்கள் கிடைக்கும். நல்ல நண்பர்களின் சேர்க்கை ஏற்பட்டு அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். விருந்தினர்களுடன் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். அரசு ஆதாயங்களால் தொழில் வழியில் முன்னேற்றம் ஏற்படும். கவனக் குறைவினால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாக நேரலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவுகளால் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். பக்திப் பிரசங்கங்கள் கேட்பதில் ஆர்வம் ஏற்படும். முன்பின் அறியாதவர்கள் கூட உங்களுக்கு உதவ முன் வருவார்கள். மேடைப் பேச்சாளர்களுக்கு அவர்களின் பேச்சு வன்மையால் வருமானம் அதிகரிக்கும். புதிய வியாபாரத் தொடர்புகளால் இலாபம் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டும், பதவி உயர்வின் மூலமாகப் பணப்பயன்களை அடைவீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் வீடு, மனை ஆகியவை வாங்கும் யோகம் ஏற்படும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. பங்குச் சந்தை விவகாரங்களில் ஆலோசித்து இறங்குவது நல்லது. நெடுந்தூரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. துன்பங்களைத் தீர்க்கிறேன் பேர்வழியே என்று, கொதிக்கும் சட்டியிலிருந்து தப்பிக்க, கொழுந்துவிட்டு எரியும் தீயில் குதித்துவிடாதீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் கேளிக்கை, விருந்துகள் எனப் பொழுது மகிழ்ச்சியாகக் கழியும். தூரதேசத்தில் இருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்களால் மன மகிழ்ச்சி ஏற்படும். சோம்பல் காரணமாகச் சுறுசுறுப்பற்ற நிலை ஏற்படும். ஆயினும், எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை ஆன்மிக காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வீர்கள். அமைதியை நிலைநாட்ட வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும். தாய் மூலமாக நன்மைகள் ஏற்படும். எதிர்பார்த்த இடங்களிலிருந்து பணவரவு கிடைக்கும். உறவுகள் மூலமாகவும் பணவுதவிகள் கிடைக்கலாம். அரசுவகையில் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைத்து வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். வீட்டில் ஏற்படும் குழப்பங்கள் காரணமாக கோபமும், உணவின் மீதும் வெறுப்பும் ஏற்படலாம். தொழிலில் எதிர்பார்ப்புக்கு மேல் உற்பத்தி பெருகும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் நீங்கள் விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும், ஆடை சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பணவரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகளுக்காக எதிர்பார்க்கப்படும் வங்கிக் கடனுதவிகள் தாமதத்திற்குப் பின்னரே கிடைக்கும். அரசுப் பணியாளர்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். குடும்பத்தாரிடையே ஓரளவே ஒற்றுமை நிலவும். அவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது, நல்ல முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும். தெய்வீக கைங்கர்யங்களில் ஆர்வம் ஏற்பட்டு தானதருமங்கள் செய்ய முற்படுவீர்கள். அனைத்துப் பணிகளிலும் மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் அனைத்து வசதிகளும் இன்பமும் ஏற்படும். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பால் உயர்வு ஏற்படும். அனைவரையும் கவரும் வண்ணம் சிறப்பான ஆடை அணிந்து மிடுக்காக உலாவருவீர்கள். தனவருமானம் அதிகரிப்பதால் அனைத்துக் காரியங்களும் அனுகூலமாய் இருக்கும். அதற்கேற்ப செலவினங்களும் கூடும். தொழிலில் மிகப் பெரிய சாதனைகளைப் புரிவீர்கள். வேலைப்பளு அதிகரிக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழில் இலாபம் ஆகியவை ஏற்படும். வீடு வாங்கும் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். பல வழிகளிலும் பணவரவுகள் அதிகம் கிடைக்கலாம். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகள் மூலமாக வருமான வாய்ப்புகள் பெருகும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். வழக்குகள் பைசலாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்கவேண்டிய சூழ நிலை ஏற்படும். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடின மாக உழைக்க வேண்டியது வரும். வாடிக்கையாளர்களைக் கவர புதிய பரிசுத் திட்டங்களை அறிவிப்பீர்கள். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பெண்களின் வாழ்க்கையில் துன்பங்கள் மறைந்து, முன்னேற்றம் ஏற்படும். கற்பனை வளம் பெருகும். வியாபாரிகள் நல்ல வருமானம் அடைவர்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பல வகையான உயரக வாகன வசதி அமையும். கணவன், மனைவி இடையே மிகுந்த ஒற்றுமை ஏற்பட்டு சந்தோஷம் நிலவும். அலங்காரப் பொருட்கள் மற்றும் வாசனை திரவிய வியாபாரங்களில் அதிக இலாபம் காணலாம். அரசுப் பணியாளர்களுக்கு, அதிகாரிகளின் உதவியால் உயர்பதவிகள் கிடைக்கும். மாணவர்கள் கருத்தோடு படித்தால் நல்ல மதிப்பெண்கள் பெறலாம். வியாபாரிகளுக்கு அவர்கள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். பணியில் முழுக் கவனம் செலுத்துவது நல்லது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மே 19 திகதியை போர்வெற்றித்தினமாக கொண்டாட விரும்பாத ஜனாதிபதி?



வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) 60 வருட நிறைவுக் கொண்டாட்டங்கள் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் மே 14 ஆம் திகதி நடைபெற்றபோது உரையாற்றிய ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தங்களது இயக்கத்தை வழிநடத்திய மனச்சாட்சி பற்றி நிறையவே பேசினார். வரலாறு பூராவும் தங்களது மனச்சாட்சி சரியான பாதையைக் காட்டி வந்திருப்பதாகவும் எதிர்காலச் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் கூட மனச்சாட்சி தங்களுக்கு துணிவாற்றலைக் கொடுத்திருக்கிறது என்றும் அவர் கூறினார். அந்த மனச்சாட்சியைப் பாதுகாப்பதற்கு தங்களை அர்ப்பணித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஐந்து நாட்கள் கழித்து மே 19 ஆம் திகதி பத்தரமுல்லவில் இடம்பெற்ற 16 வது தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் பங்கேற்பது தொடர்பில் முன்கூட்டியே உறுதியான தீர்மானத்தை எடுப்பதில் ஜனாதிபதி திசநாயக்க தடுமாறியதற்கு அந்த மனச்சாட்சியின் உறுத்தல் தான் காரணமோ தெரியவில்லை. போர்வீரர்களை கௌரவிப்பதற்கு வருடாந்தம் நடத்தப்பட்டுவரும் அந்த நிகழ்வை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கொள்கை அடிப்படையிலான ஒரு தீர்மானத்தை அவர் எடுத்திருப்பார் என்று கூறமுடியாது.

ஆனால், ஜனாதிபதி திசநாயக்கவும் பிரதமர் ஹரிணி அமரசூரியவும் போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் பங்கேற்கமாட்டார்கள் என்றும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் அருணா ஜெயசேகர தலைமையில் நிகழ்வு நடைபெறும் என்றும் முதலில் அறிவித்த அரசாங்கம் எதிர்க்கட்சிகள் மற்றும் சமூக ஊடகங்களிடம் இருந்து வந்த கடுமையான விமர்சனங்களை அடுத்து அந்த அறிவிப்பு தவறான தொடர்பாடலின் விளைவானது என்று பிறகு மறுதலித்ததை எத்தனை பேர் நம்பினார்களோ தெரியவில்லை.

இறுதியில் ஜனாதிபதி போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் பங்கேற்பதை தவிர்க்க முடியவில்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசாங்கம் விடுதலை புலிகளுக்கு எதிரான போரை முழுவீச்சில் முன்னெடுப்பதற்கு ஊக்கத்தை கொடுத்ததை ஜே.வி.பி. எப்போதும் பெருமையாகப் பேசிக்கொள்கிறது. அதன் இன்றைய தலைவர் நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற வகையில் முப்படைகளினதும் பிரதம தளபதியாக இருக்கும் நிலையில் போர்வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு தொடர்பில் ஒரு தடுமாற்றத்தை காட்டிய காரணத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஜே.வி.பி. போரை ஆதரித்த வேளையில் அதன் தலைவராக காலஞ்சென்ற சோமவன்ச அமரசிங்கவே இருந்தார் என்ற போதிலும், போரைத் தீவிரப்படுத்துவது தொடர்பில் திசநாயக்க வேறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தார் என்பதற்கு எந்தப் பதிவும் கிடையாது. அவரின் தலைமையின் கீழ்தான் தேசிய மக்கள் சக்தியில் ஓய்வுபெற்ற படைவீரர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளின் பிரிவுகள் அமைக்கப்பட்டன.


அதேவேளை, ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னரான கடந்த ஆறு மாதகாலப் பகுதியில் சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகளில் கடைப்பிடித்துவரும் அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது மூன்று தசாப்தகால போரின் விளைவாக ஏனைய சமூகங்களை விடவும் கூடுதலாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தக்கூடாது என்பதற்காக போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் பங்கேற்பது குறித்து ஜனாதிபதி தயக்கத்தைக் காட்டியிருக்கக்கூடும் என்று நம்புவதும் கஷ்டமாக இருக்கிறது.

எது எவ்வாறிருந்தாலும், தேசியவாத சக்திகளிடம் இருந்து கிளம்பிய கடுமையான விமர்சனங்களை அடுத்தே ஜனாதிபதி தனது மனதை மாற்றிக் கொண்டார் என்பதில் சந்தேகமில்லை. எதிர்காலத்தில் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கான முயற்சிகள் உட்பட சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகள் தொடர்பில் தேசியவாத சக்திகளிடம் இருந்து வரக்கூடிய எதிர்ப்புக்களை ஜனாதிபதி திசநாயக்க எவ்வாறு கையாளுவார் என்பதற்கு போர்வீரர்கள் நினைவு நிகழ்வு கட்டியம் கூறிநிற்கிறது எனலாம்.

உள்நாட்டுப்போரின் முடிவுக்கு பிறகு சிங்கள பௌத்த தேசியவாதம் போர்வெற்றிவாதத்துடன் பின்னிப்பிணைந்துவிட்ட ஒரு பின்புலத்தில், நாட்டின் ஐக்கியத்தையும் ஆட்புல ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காக உயிரைத் தியாகம் செய்தவர்கள் என்று பெரும்பான்மையின மக்கள் போற்றி வணங்கும் போர்வீரர்களின் நினைவை அவமதிப்பதாகத் தோன்றக்கூடிய எந்தவொரு காரியத்தையும் செய்வது ஜனாதிபதிக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ அரசியல் ரீதியில் கட்டுப்படியாகாது. அதனால், தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் பங்கேற்கும் விடயத்தில் ஒரு பொருந்தாத்தன்மைக்கு ஜனாதிபதி தன்னை ஏன் உட்படுத்தினார் என்பது பெரிய புதிராக இருக்கிறது.

கடந்த வருடம் நடைபெற்ற 15 வது தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வு அன்றைய பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில்தான் நடைபெற்றது. முன்னாள் ஜனதிபதி மகிந்த ராஜபக்ச அதில் பங்கேற்ற அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அங்கு காணவில்லை. ஆனால், அந்த நேரத்தில் எந்த சர்ச்சையையும் கிளப்பாத எதிர்க்கட்சிகளும் தேசியவாத சக்திகளும் ஜனாதிபதி திசநாயக்க விடயத்தில் போர்க்குரல் எழுப்பியிருக்கின்றன. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்திடம் இருந்தும் இனவாத அரசியல் சக்திகளிடம் இருந்தும் வந்த நெருக்குதல்கள் காரணமாகவே ஜனாதிபதி போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் பங்கேற்பதை தவிர்ப்பதற்கு முதலில் தீர்மானித்தார் என்று கூட உதய கம்மன்பில போன்றவர்கள் கூறினார்கள்.

**போர்வெற்றியில் கொண்டாடுவதற்கு எதுவுமில்லை என்பதை உணர்த்திய அவரின் உரையை சிங்கள தேசியவாத சக்திகள் கடுமையாக கண்டனம் செய்திருக்கின்றன. ஆனால், தமிழ் அரசியல் சக்திகள் அவரது உரையை வரவேற்காதது துரதிர்ஷ்டவசமானது.**



ராஜபக்சாக்கள் அதிகாரத்தில் இருந்து இறங்கிய பிறகு முதற்தடவையாக தங்களது சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போர்வீரர்கள் நினைவு நிகழ்வை கடந்த வாரம் 'தாய்நாட்டின் உண்மையான சுதந்திரம்" என்ற தலைப்பில் தனியாக நடத்தினார்கள். முதலில் போரைப் பயன்படுத்தி பெரும்பான்மையினவாத அணிதிரட்டலைச் செய்த அவர்கள் போரின் முடிவுக்கு பிறகு போர் வெற்றிவாதத்தை பயன்படுத்தி அதே அணிதிரட்டலைச் செய்தார்கள். ஆனால், தவறான ஆட்சிமுறை, அதிகார துஷ்பிரோகம், குடும்ப அரசியல் ஆதிக்கம் மற்றும் ஊழல் காரணமாக ராஜபக்சாக்கள் அதிகாரத்தில் இருந்து மக்களால் விரட்டப்பட்டார்கள். மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கு பெரும்பான்மையினவாத அணிதிரட்டலை தவிர வேறு மார்க்கம் கிடையாது என்ற நிலையில், தங்களுக்கு கிடைக்கக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் ராஜபக்சாக்கள் பயன்படுத்துவதற்கு தவறமாட்டார்கள்.

தங்களது ஆட்சிக்காலத்திலேயே போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது என்பதால் சிங்கள மக்கள் தங்களுக்கு கடமைப்பட்டவர்கள் என்ற ஒரு எண்ணத்தை ராஜபக்சாக்கள் கொண்டிருக்கிறார்கள். போர்வெற்றிக்கு தங்களைத் தவிர வேறு எவருக்கும் 'நியாயபூர்வமான உரிமை" கிடையாது என்பது அவர்களின் நினைப்பு. மக்கள் மத்தியில் அவர்கள் செல்வாக்கை இழந்துவிட்டாலும் கூட, தேசியவாத சக்திகள் தங்களை மீள அணிதிரட்டுவதற்கு நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும் சக்திகளாக ராஜபக்சாக்கள் இன்னமும் கூட விளங்குகிறார்கள்.

இனவாதமும் மதத்தீவிரவாதமும் மீண்டும் தலையெடுக்க ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்று அரசாங்க தலைவர்கள் ஓயாது கூறிக்கொண்டிருக்கின்ற போதிலும், அவர்களது அணுகுமுறைகளும் செயற்பாடுகளும் சிறுபான்மைச் சமூகங்களிடமிருந்து அவர்களை தூரவிலக்கிக்கொண்டே வருகிறது. சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகளை கையாளுவதில் முன்னைய அரசாங்கங்களுக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கும் இடையில் வேறுபாடு இல்லை என்று வடக்கு, கிழக்கில் தமிழ் தேசியவாத கட்சிகள் பிரசாரம் செய்து உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ் மக்களிடம் மீண்டும் ஆதரவை பெறக்கூடியதாக நிலைவரம் மாறியிருக்கிறது.

ஆனால், தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உள்ள இயலாமை காரணமாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களின் அதிருப்திக்கு உள்ளாகியிருக்கின்ற அதேவேளை, சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகளைக் கையாளுவதில் தென்னிலங்கை தேசியவாத சக்திகளை அந்நியப்படுத்திவிடக் கூடாது என்பதில் அது மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கிறது.

பொருளாதார நெருக்கடி உட்பட சகல சமூகங்களையும் பாதிக்கின்ற பிரச்சினைகளை முன்வைத்து அரசாங்கத்துக்கு எதிராக மக்களை திசைதிருப்ப இயலாமல் இருக்கும் எதிரணி கட்சிகளும் தேசியவாத சக்திகளும் இனவாத அரசியலின் அடிப்படையிலேயே தேசிய மக்கள் சக்திக்கு எதிரான வியூகங்களை வகுப்பதில் நாட்டம் காட்டக்கூடிய சாத்தியம் இருக்கிறது. தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வு தொடர்பில் ஜனாதிபதி மீதான கண்டனங்கள் இதற்கு ஒரு சான்று.

என்றாலும், போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் ஜனாதிபதி திசாநாயக்க நிகழ்த்திய உரை நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதாகும். அந்த நிகழ்வை ராஜபக்சாக்கள் போன்று போர் வெற்றியை நினைவுபடுத்தி மகிழ்வதற்கான ஒரு கொண்டாட்டமாக கருதக்கூடாது என்பது அவரின் சிந்தனையாக இருக்கிறதுபோன்று தெரிகிறது. ஏனென்றால், அவர் போரில் இறந்த படையினரை 'போர்வீரர்கள்' என்று இல்லாமல் 'படையினர்" என்று அழைத்ததுடன் போரின் துன்பக்கதையை பற்றி பேசினார்.

"நாட்டில் நிலைபேறான சமாதானத்தை தோற்றுவிப்பதே தங்களது உயிர்களைக் கொடுத்தவர்களுக்கு நாடு வழங்கக்கூடிய அதியுயர்ந்த வடிவிலான நீதியாகும். இந்த நினைவு நிகழ்வு வெறுமனே போரின் முடிவை நினைவு கூருவது மாத்திரமல்ல,சகல சமூகங்களையும் ஐக்கியப்படுத்துவதற்கும் பிளவுகள் மீண்டும் தூண்டிவிடப்படுவதை அனுமதிக்காமல் சகோதரத்துவத்துவம் மற்றும் இணக்கப் போக்கின் அடிப்படையிலான தேசம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கும் சூளுரைப்பதற்கான நிகழ்வுமாகும்.

"போர் ஒரு துன்பியல் நிகழ்வு. சொல்லொணா சோகத்தை அனுபவித்த ஒரு தேசம் என்ற வகையில் மீண்டும் அத்தகைய மோதல்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்ய வேண்டியது எமது கடமையாகும். சந்தேகம், கோபம் மற்றும் வெறுப்புக்கு பதிலாக சமாதானம், ஐக்கியம், பரிவு ஆகியவற்றை தனிச்சிறப்புகளாகக் கொண்ட தேசம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு நாம் பாடுபடவேண்டும்.

"தெற்கில் மாத்திரமல்ல, வடக்கிலும் தங்களது கணவர்களினதும் பிள்ளைகளினதும் படங்களை ஏந்திய வண்ணம் வீதிகளில் மக்கள் நிற்கிறார்கள். ஒவ்வொரு பெற்றோருக்கும் அவர்களின் பிள்ளைகள் விலைமதிப்பற்றவர்களே. அதனால், பாரிய அனர்த்தம் ஒன்றுக்கு முகங்கொடுத்த ஒரு நாடு என்ற வகையில் எமது மண்ணில் மீண்டும் போர் ஒன்று மூளுவதை தடுக்க வேண்டியது எமது பொறுப்பாகும்" என்று ஜனாதிபதி தமதுரையில் கூறினார்.

போரை முடிவுக்கு கொண்டுவருவதற்காக தங்கள் உயிர்களைத் தியாகம் செய்த படையினரை கௌரவித்து நினைவு கூர்ந்த போதிலும், போர்வெற்றி பற்றி ஜனாதிபதி கூறாமல் விட்டது இதுவரையான போர்வீரர்கள் நினைவு நிகழ்வுகளில் இருந்து கடந்த வாரத்தைய நிகழ்வை வேறுபடுத்துகிறது. சமாதானத்துக்கும் முன்னேற்றத்துக்குமான புதிய போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு சகலரும் ஐக்கியப்பட வேண்டும் என்ற அழைப்புடன் திசாநாயக்க தனது உரையை நிறைவு செய்தார்.

போர்வெற்றியில் கொண்டாடுவதற்கு எதுவுமில்லை என்பதை உணர்த்திய அவரின் உரையை சிங்கள தேசியவாத சக்திகள் கடுமையாக கண்டனம் செய்திருக்கின்றன. ஆனால், தமிழ் அரசியல் சக்திகள் அவரது உரையை வரவேற்காதது துரதிர்ஷ்டவசமானது. கடந்த காலத்தில் தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வுகளை இனப்பிளவை மேலும் ஆழமாக்குவதற்கான ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்திய முன்னாள் ஜனாதிபதிகளை விடவும் வேறுபட்ட முறையில் கையாளுவதற்கு முன்வந்ததன் மூலமாக ஜனாதிபதி கூறிய செய்தி சரியாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். மே 19 போரைப் புகழ்பாடிப் போற்றுவதற்கான தினம் அல்ல.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனமோதலின் விளைவான காயங்களை குணப்படுத்துவதற்கு புதியதொரு கதையாடலை உருவாக்குதல்!



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க 16 வது தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் தயக்கத்துடன் தான் பங்கேற்றார் போன்று தோன்றுகிறது. எதிர்க்கட்சிகளில் சில பிரிவினர் மற்றும் சமூக ஊடகங்களிடமிருந்து வந்த கடுமையான கண்டனங்களுக்கு பிறகு அவர் அந்த நிகழ்வில் பங்கேற்பார் என்று அரசாங்கம் அறிவித்தது. நிகழ்வுக்காக அச்சிடப்பட்ட அழைப்பிதழில் ஜனாதிபதியின் பெயர் இருக்கவில்லை. தொடர்பாடலில் ஏற்பட்ட தவறு காரணமாகவே இவ்வாறு நேர்ந்துவிட்டது என்றும் நினைவு நிகழ்வில் பங்கேற்கும் நோக்கத்துடனேயே ஜனாதிபதி எப்போதும் இருந்தார் என்றும் அரசாங்கம் விளக்கம் கூறியது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியே ஆயுதப் படைகளின் பிரதம தளபதி. அவரே வழமையாக பாதுகாப்பு அமைச்சையும் தனது பொறுப்பில் வைத்திருப்பார். ஜனாதிபதி திசாநாயக்கவும் அந்த பாரம்பரியத்தை பின்பற்றுகிறார். ஆயுதப்படைகளின் பிரதம தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் அவரது பிரசன்னம் அடையாளபூர்வமானதும் அவசியமானதுமாகும்.

நிகழ்வில் பங்கேற்பதற்கு அவரது தீர்மானம் இறுதி நேரத்தில் எடுக்கப்பட்ட ஒன்று என்ற விமர்சனங்களுக்கு புறம்பாக, அதில் ஜனாதிபதியின் உரையும் கூட கண்டனத்துக்கு உள்ளானது. உயிர்த்தியாகம் செய்த படைவீரர்களை "போர் வீரர்கள் (War heroes)" என்று என்று அழைக்காமல் ஜனாதிபதி படையினர் (Soldiers) என்று அழைத்தது தொடர்பானவையாகவே இந்த கண்டனங்கள் இருந்தன. போரில் உயிரிழந்த இராணுவ வீரர்களை போர்வீரர்கள் என்று குறிப்பிடுவது நாட்டில் வழமையான பதமாக இருக்கிறது.

மறுபுறத்தில், போரில் உயிரிழந்த விடுதலை புலிகள் இயக்க உறுப்பினர்களை "தியாகிகள்" என்று தமிழ் மக்கள் குறிப்பிடுகிறார்கள். தான் தலைமை தாங்குவது பெரிய பிளவுகொண்ட நாட்டையே என்பதை ஏற்றுக் கொள்வதன் காரணமாகவே "போர்வீரர்கள்" என்ற பதத்துக்கு பதிலாக "படையினர்" என்ற நடுநிலை பதத்தை பயன்படுத்த விரும்பியிருப்பார்.

ஜனாதிபதியின் மொழித்தெரிவு மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தும் ஆரவாரப் பேச்சுக்களில் இருந்து விலகி பெருமளவுக்கு சகல சமூகங்களையும் அரவணைக்கும் தேசிய அடையாளம் ஒன்றை நோக்கி நகரவதற்கான ஒரு முயற்சியை பிரதிபலிக்கிறது. இது விடயத்தில் ஒரு அரசியல் சவாலை எதிர்நோக்கும் ஜனாதிபதியை ஆதரிக்க வேண்டியது அவசியமாகும். ஜனாதிபதி மீதான கண்டனங்களை பொறுத்தவரை, தேசியவாத எதிரணியும் சமூக ஊடகங்களும் மிகவும் கடுப்பானதாகவே இருந்து வருகின்றன. ஜனாதிபதி திசாநாயக்க "போர்வீரர்களை சாதாரண படையினராக"
தரந்தாழ்த்திவிட்டார் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால், உள்நாட்டுப் போர்களில் வெற்றி கொண்டாடப்படுவதில்லை, கொண்டாடப்படவும் கூடாது. ஏனென்றால், அந்த வெற்றிகள், அமெரிக்காவிலும் ஸ்பெயினிலும் காணப்பட்டதை போன்று தேசிய காயங்களை ஆழமாக்குவதுடன் நல்லிணக்கத்துக்கு மேலாக வன்முறையைப் பெருமைப்படுத்தும் ஆபத்தைக் கொண்டுள்ளன. அந்த இரு நாடுகளிலும் ஒரு தரப்பின் வெற்றியைக் கொண்டாடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் ஐக்கியத்தை வளர்ப்பதற்கு பதிலாக பிளவை நீடிக்கச் செய்தன.

### குணப்படுத்தும் கதையாடல்


தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வில் நிகழ்த்திய உரையில் ஜனாதிபதி திசாநாயக்க போரின் விளைவான பாதிப்புக்கள் மீது கவனத்தைச் செலுத்தும் செய்தியொன்றை நாட்டுக்கு கூறினார். போரின்போது அவலங்களைச் சந்தித்த அல்லது மரணமடைந்த படையினரினதும் குடிமக்களினதும் தியாகங்களை அவர் கௌரவித்தார். சகல சமூகங்களும் அனுபவித்த ஆழமான வேதனையையும் இழப்புக்களையும் அவர் நினைவுபடுத்தினார்.

"தெற்கில் மாத்திரமல்ல, வடக்கிலும் கூட மக்கள் வீதிகளில் தங்களது கணவர்களினதும் பிள்ளைகளினதும் படங்களை ஏந்திய வண்ணம் இறந்தவர்களுக்கு அஞ்சலி செய்கிறார்கள். ஒவ்வொரு பெற்றோருக்கும் அவர்களது பிள்ளைகள் விலைமதிக்க முடியாதவர்களே. அதனால், அத்தகைய பாரிய அனர்த்தம் ஒன்றுக்கு முகங்கொடுத்த ஒரு தேசம் என்ற வகையில், எமது நாட்டில் மீண்டும் ஒரு போர் நிகழாதிருப்பதை தடுப்பது எமது பொறுப்பாகும் " என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அவ்வாறு செய்ததன் மூலம் நடந்து முடிந்தது நாட்டுக்குள் மக்களினால் நடத்தப்பட்ட ஒரு உள்நாட்டுப்போரே என்ற தனது நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

சிறுபான்மைச் சமூகங்களை அன்னியப்படுத்தக்கூடிய சொற்பதங்களை தனதுரையில் தவிர்த்ததன் மூலம் போரில் உயிரிழந்தவர்களின் பின்புலத்தைப் பொருட்படுத்தாமல் சகலரையும் தழுவியதாக கூட்டுநினைவு ஒன்றை வளர்த்தெடுப்பதில் தனக்கிருக்கும் விருப்பம் குறித்து ஜனாதிபதி சமிக்ஞையைக் காண்பித்திருக்கிறார். நாட்டு மக்கள் மத்தியில் பிளவுகளுக்கு வழிவகுக்கக்கூடியதாக இல்லாமல் ஐக்கியத்தை ஏற்படுத்துவதையும் வடுக்களை குணப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டதாக அமையக்கூடிய தேசிய கதையாடலை நகர்த்துவதற்கான ஒரு முயற்சி குறித்த சமிக்ஞையையும் அவர் காண்பித்திருக்கிறார்.

ஜனாதிபதி தனதுரையில் இலங்கை பாதுகாப்பு படைகளின் தியாகங்களை பெருமைப்படுத்தினார். "பல படையினர் இந்த போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு தங்களது உயிர்களை தியாகம் செய்தார்கள். நினைவுத் தூண்களில் பொறிக்கப்பட்டிருக்கும் அவர்களின் பெயர்கள் அவர்களின் தியாகத்துக்கான சான்றாக விளங்குகின்றன. வேறு பலர் நிரந்தரமாகவே ஊனமுற்றவர்களாகி விட்டார்கள். அதேவேளை, ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்களது அன்புக்குரியவர்களை இழந்து இன்னமும் சோகத்தில் மூழ்கியிருக்கின்றன. ஒரு தேசம் என்ற வகையில் சாசுவதமாக கடமைப்பட்டிருக்கிறோம்" என்று அவர் கூறினார்.

**ஆறு மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் அந்த மாகாணங்களுக்கு வெளியில் உள்ள தேசிய அரசியல் கட்சி ஒன்றுக்கு முன்னென்றும் இல்லாத வகையில் வாக்களித்திருந்தார்கள். அவர்களது பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் காட்டப்படும் ஒவ்வொரு நாள் தாமதமும் குறுகிய இனத்துவ தேசியவாத சக்திகளை பலப்படுத்துகிறது.**



ஆனால், "போர் அவலத்தடனும் அழிவுடனும் ஒரு மித்துப்போகும் ஒன்று" என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். "போரில் சண்டையிட்டவர்கள் போரைச் செய்ய வேண்டும் என்பதற்காக அதில் ஈடுபடவில்லை. அவர்கள் சமாதானத்தையே நாடினார்கள். இன்று அழிவின் மீதிகளைக் காண்கிறோம். சிறுவர்கள் அனாதைகளாக்கப்பட்டனர். பெற்றோர் சோகத்தில் வாழ்கிறார்கள்.பலர் தங்கள் வாழ்க்கைத் துணைகளை இழந்து தவிக்கிறார்கள். வடக்கில் இருந்து தெற்கு வரை கவலைக்கு இனவேறுபாடு தெரியாது" என்று அவர் சொன்னார்.

புதியதொரு கதையாடலை உருவாக்குவதற்கு ஜனாதிபதி திசாநாயக்க முயற்சிக்கிறார் என்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அதாவது, போரின் முடிவை வெறுமனே நினைவு கூருவதாக மாத்திரம் இல்லாமல், சகோதரத்துவத்திலும் இணக்கப்போக்கிலும் வேரூன்றிய ஒரு தேசத்தைக் கட்டியெழுப்புவதில் சகல சமூகங்களையும் ஐக்கியப்படுத்தும் உறுதிப்பாட்டுடனான திசையில் நாட்டை வழிநடத்துச் செல்ல அவர் நாட்டம் கொண்டிருக்கிறார். பிளவுகளை மீண்டும் தூண்டிவிடும் செயற்பாடுகளை அனுமதிக்கக்கூடாது என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார் என்று தோன்றுகிறது.

கதையாடல் என்பது மக்களின் மனதில் பதியக்கூடிய செய்திகளை கொண்டு செல்வதற்கான, மக்களின் உணர்வுகளை கவருவதற்கான வழிவகையாகும். கதையாடலை பயன்படுத்தி போர் மற்றும் அழிவு நோக்கங்களுக்காக மக்களை அணிதிரட்ட முடியும். அடுத்தவருக்கு எதிரான வன்செயல்களை நியாயப்படுத்துவதற்கு ஒரு பக்கச்சார்பான கதையாடல்கள் பயன்படுத்தப்படுகின்ற மோதல்களையும் முரண்நிலைகளையும் உலகின் பல பாகங்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையிலும் கூட, பழமையான பகைமைகளையும் அண்மைக்கால அநீதிகளையும் பற்றிய கதையாடல்கள் அரசியல் ஆதாயத்துக்காக அடுத்தவர்களை கொடூரமானவர்களாக காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் 2019 ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கதையாடல் எதிரிகளை ஒழித்துக்கட்டி சிங்கள தேசத்தின் வெற்றியை உறுதிப்படுத்தி அதற்கு உரித்தான இடத்தைக் கொடுப்பதாக அமைந்தது. அரசாங்கம் நடத்திய தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வக்கு மறுநாள் மே 20 ஆம் திகதி அதே இடத்தில் இன்னொரு நினைவு நிகழ்வை ராஜபக்ச குடும்பம் நடத்தியது.

### புதிய கதையாடல்

சமாதானக் கதையாடல்கள் சகல தரப்புக்களின் துன்பங்களையும் உணர்ந்துகொண்டு முன்னாள் எதிரிகளை மனிதாபிமானத்துடன் நோக்கும் என்பதுடன் சமாதான சகவாழ்வுக்கான ஒரு நோக்கைத் தரும். அவை இனஒதுக்கல் ஆட்சியின் முடிவுக்கு பின்னரான தென்னாபிரிக்காவின் உண்மை கூறுதலில் அல்லது வட அயர்லாந்தின் அதிகாரப்பகிர்வுச் செயன்முறையில் காணக்கூடியதாக இருந்ததைப் போன்று பேச்சுவார்த்தைக்கும் நல்லிணக்கத்துக்கும் இடப்பரப்பை திறக்கின்றன.

இலங்கையிலும் கூட, பொதுவான மனிதப்பண்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய கதையாடலினால் நிலைபேறான சமாதானத்துக்கான அத்திபாரத்தை அமைக்கலாம். இனநெருக்கடியை இருப்புக்கான அச்சுறுத்தல், பயங்கரவாதம் மற்றும் போர் என்ற நிலையில் இருந்து சகவாழ்வுக்கும் அதிகாரப் பகிர்வுக்குமான ஒன்றாக மாற்றி வடிவமைப்பதற்கு முயற்சித்த அறிவார்ந்த தேசியத் தலைவர்களின் வரிசையில் இணைந்து கொள்வதற்கு ஜனாதிபதி திசாநாயக்க தான் அறிமுகப்படுத்த நாட்டம் கொண்டிருக்கும் புதிய கதையாடலுடன் இனங்களுக்கு இடையிலான அதிகாரப்பகிர்வு மற்றும் அதிகாரப் பரவலாக்கம் ஆகியவற்றைச் சேர்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

முதலாவது அத்தகைய தலைவர் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க. அவர் அரசியல் தீர்வொன்றை நோக்கிய - அடுத்தடுத்து முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளுக்குமான ஒரு கட்டமைப்பை வகுத்த 1957 பண்டாரநாயக்க -- செல்வநாயகம் உடன்படிக்கையை செய்தார். அந்த முயற்சிகளில் எந்த ஒன்றுமே வெற்றி பெற முடியவில்லை என்றாலும் கூட, அவர் அமைத்த கட்டமைப்பு முக்கியமான ஒரு அத்திபாரமாகும்.

புதிய கதையாடலுக்காக குரல்கொடுத்த முக்கியமான கடைசித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. உண்மை மற்றும் பொறுப்புக்கூறலுடன் சேர்த்து இழப்பீட்டையும் இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு ஒன்றின் தேவையை ஏற்றுக் கொண்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின 30-1 தீர்மானத்துக்கு விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் 1915 ஆம் ஆண்டில் இணை அனுசரணை வழங்கியது. ஜனாதிபதி திசாநாயக்கவும் அவரது அரசாங்கமும் அதிகாரத்துக்கு புதியவர்களாகவும் உணர்ச்சியைக் கிளறக்கூடிய இனநெருக்கடியை கையாளுவதில் அவசரம் காட்டுவதற்கு தயங்குபவர்களாகவும் இருக்கின்ற போதிலும், விக்கிரமசிங்க விட்ட இடத்தில் இருந்து அந்த முயற்சியை தொடரவேண்டிய தேவை இருக்கிறது.

16 வது தேசிய போர்வீரர்கள் நினைவு நிகழ்வு தொடர்பிலான அணுகுமுறை சகல சமூகங்களையும் அரவணைத்து கடந்த கால மோதலின் விளைவான வடுக்களைக் குணப்படுத்துவதற்கான தேசிய கதையாடலை நோக்கிய ஒரு

(14ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவை எட்டாது முடிவதற்கு பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் கலந்து கதைத்து கலைவது...

**பனங்காட்டான்**

தமிழர் தேசிய பரப்பில் கடந்த நாட்களில் இரண்டு விடயங்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. வடமாகாணத்தின் நான்கு மாவட்டங்களில் கரையோரப் பகுதியில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கு அநுர குமர அரசு மேற்கொண்ட சூழ்ச்சி முதலாவது. நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் சபைகளை அமைப்பதற்கு தமிழர் தரப்புகளால் எடுக்கப்பட்ட முயற்சிகள் இரண்டாவது.

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் வவுனியாவைத் தவிர வடக்கிலுள்ள வேறெந்தச் சபையையும் வெற்றி பெறும் நிலையில் அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி இல்லை. ஆனால், பல சபைகளில் இரண்டாம் இடத்தில் வந்து தங்களுக்கென உள்ளூர் மட்டத்தில் ஒரு வாக்கு வங்கியை இது பெற்றுள்ளது என்பது மறுக்க முடியாதது.

முன்னர் ஒரு தடவை இப்பத்தியில் குறிப்பிட்டவாறு 2018ல் யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஊர்வலத்தோடு மே தினத்தை நடத்தியபோதே ஜே.வி.பி. இங்கு காலூான்றுவதற்கு அத்திவாரமிட்டது. இதில் தமிழரசுக் கட்சி சுமந்திரனின் பங்களிப்பு மறக்க முடியாதது.

நாடாளுமன்ற தேர்தலில் பெற்ற வெற்றியைப் போன்று உள்ளூர் மட்டத்திலான தேர்தலில் அடையாளம் காட்டக்கூடிய தான வெற்றியை பெற முடியாதென்பது தேசிய மக்கள் சக்திக்கு தெரியாததல்ல. எனினும், வடக்கில் தங்கள் பலத்தை ஓர் அளவுக்காவது தக்க வைக்க வேண்டுமென்ற நோக்கமே ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட பெரும் பட்டாளம் இத்தேர்தல் பரப்புரைக்கு இறக்கப்பட்டது.

தேர்தல் முடிவுகள் தமிழர் தாயகத்தில் ஒரு சதிராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் வேளையில், தமிழர்களை திசைதிருப்பும் நோக்கில் காணி அபகரிப்பு வர்த்தமானியை அரசு வெளியிட்டது. அவர்கள் எதிர்பார்த்தது அவ்வாறே நடந்தது.

சமகாலத்தில் தேர்தல் முடிவுகளை ஒட்டியதாக சபைகளை உருவாக்கும் சவாலை சந்தித்தவாறு காணி அபகரிப்பு நடவடிக்கையை முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமிழர் தரப்புக்கு ஏற்பட்டது, தமிழ்த் தேசிய அவையின் தலைவர் கஜேந்திரகுமார் மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினரும் வர்த்தமானி அறிவிப்பை ரத்துச் செய்ய வேண்டுமென நெருக்குதல் கொடுக்க ஆரம்பித்தனர்.

ஆனால் தமிழரசுக்கட்சி வர்த்தமானியை ரத்துச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வலுப்படுத்த போராட்டத்தை அறிவித்தது. உலகையே உலுப்பக்கூடிய போராட்டம் வெடிக்குமெனவும், சட்டமறுப்புப் போராட்டமும் இடம்பெறுமெனவும் கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரன் அரசுக்கு பயமுறுத்தல் விடுத்தார். மாவை சேனாதிராஜாவின் வழக்கமான போராட்டம் வெடிக்கும் போல் இதுவும் அமையலாமென தமிழ்ப் பத்திரிரியொன்று நையாண்டி செய்ததுமுண்டு.

இதற்கிடையே தமிழ் எம்.பிக்களை அழைத்துப் பேசிய பிரதமர் அமைச்சரவையில் இதுபற்றிப் பேசி முடிவெடுக்கப்படுமென சமாளித்தார். மறுதரப்பில் காணி உருத்துக்காரர்களுக்கு ஆலோசனை வழங்கிய சுமந்திரன் சட்ட நடவடிக்கைகளுக்கு உசார்படுத்தினார். நல்ல வேளை அப்படியாக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

தமது சட்டத்திறமையை நிரூபிப்பதற்காக காணிச் சொந்தக்காரர்களை நீதிமன்றம் கொண்டு சென்றிருந்தால் என்ன நடைபெற்றிருக்கும். தமிழரசுக் கட்சி மீதான வழக்குகள் நீதிமன்றம் சென்றதால் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ அதுவே இங்கும் நடந்திருக்கும். காணி விவகார வர்த்தமானி அறிவிப்பை எதிர்த்து நீதிமன்றத்தில் சுமந்திரன் சட்ட நடவடிக்கை எடுத்திருந்தால், அது தேசிய மக்கள் சக்திக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்த கதையாக இருந்திருக்கும்.

**காணி விவகாரத்தில் தமிழரசுக் கட்சி சட்ட நடவடிக்கை எடுத்திருந்தால் அதனையே காரணம்கூறி நீதிமன்ற தீர்ப்பு வரும்வரை வர்த்தமானியை ரத்துச் செய்ய முடியாதென்று கூறும் வாய்ப்பு அநுர குமரவின் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்திருக்கும். தமிழரசுக் கட்சி மீதான வழக்குகள் அதன் நிர்வாகத் தெரிவுகளை முடக்கி வைத்திருப்பதை இதற்கு உதாரணமாகப் பார்க்கலாம்.**



காணி விவகாரம் நீதிமன்றத்தின் முன்னால் சென்றிருப்பதால் அந்தத் தீர்ப்பு வரும்வரை வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்ய முடியாதென்று அரசு தரப்பு கூறுவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கும். சில சமயம் மாதக்கணக்கில்கூட நீதிமன்றத்தில் இது இழுபட்டிருக்கும்.

தமிழரசுக் கட்சி மீதான வழக்கு நீதிமன்றம் சென்றதால்தான் கட்சி அதன் நிர்வாகிகளை தெரிவு செய்ய முடியாமலிருப்பதும், தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் தங்கள் பதவிகளை வகிக்க முடியாதிருப்பதும், இதனால் தலைவர், செயலாளர் என்பவர்கள் பதிலாக இயங்குவதும் தெரியாததல்ல. இவ்வாறான ஒரு இடத்துக்கு காணிப்பிரச்சனையையும் இழுத்தடிக்கும் ரகசிய திட்டத்தில்தான் சுமந்திரன் சட்டநடவடிக்கையை எடுக்க முன்வந்திருக்கலாமென்ற கருத்து தமிழ் தேசிய வட்டாரங்களில் நிலவுகிறது.

இப்போது வர்த்தமானி ரத்து என்று சொல்லப்படுவதுகூட ஒரு இடைக்காலத் தீர்வாகவே பார்க்கப்பட வேண்டும். திடுதிப்பென வேறு காணிகளை இலக்கு வைத்து அதற்கான வர்த்தமானி அறிவித்தல்கூட எவ்வேளையிலும் வெளிவரக்கூடும்.

1977ல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் முதலாவது ஆண்டிலேயே தமிழினப் படுகொலை இடம்பெற்றது. இது ஜே.ஆரின் ஆசீர்வாதத்தோடு இடம்பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டது. இதற்குப் பதிலளித்த ஜே.ஆர். குற்றச்சாட்டை மறுத்ததோடு நிறுத்தாது, தாம் நினைத்தால் இதனைச் செய்ய முடியுமென்றும் ஆனால் நினைக்கவில்லையென்றும் விளக்கமளித்தார். இதற்குப் பதிலளித்த அப்போதைய கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கதிரவேற்பிள்ளை ஜே. ஆரைப் பார்த்து, எப்போதாவது நீங்கள் நினைத்துவிட்டால் அதை செய்வீர்கள் என்பதை உங்கள் உரை மூலம் அறிய முடிகிறது. எனவே உங்களை நம்பி நாங்கள் எவ்வாறு வாழ முடியுமென்று கேட்டார். இந்தக் கேள்வியையே இப்போது அநுர தரப்பைப் பார்த்து தமிழர்கள் கேட்க வேண்டியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, இந்த வாரம் இடம்பெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் மேயர், தவிசாளர், உதவி மேயர், உதவித் தவிசாளர் தெரிவுகள் சூடுபிடித்துள்ளது. எந்தவொரு அணியும் என்ன நடைபெறும் என்று தெரியாத நிலையிலேயே காணப்படுகிறது. ஆரம்பத்திலிருந்து இன்றுவரை அநேக சபைகளில் தங்களது ஆட்சியே இடம்பெறுமென தமிழரசுக் கட்சி கூறி வருகிறது.

தமிழ்த் தேசியவாத அணிகள் மூன்று உள்ளன. தமிழ் மக்கள் பேரவை, தமிழரசு, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியவை இவை. சகல சபைகளிலும் அறுதிப் பெரும்பான்மை இல்லாவிட்டாலும் அநேகமானவைகளில் கூடுதலான ஆசனங்களை தாங்களே பெற்றுள்ளதால் மற்றைய தமிழ் தேசிய கட்சிகள் தமக்கு ஆதரவு அளிக்க வேண்டியது முறைமை என்று தமிழரசு வாதிடுகிறது. ஓரளவுக்கு அதில் நியாயம் இருப்பதுபோலவே தோற்றமுண்டு.

இதனை சரியென ஏற்றுக் கொள்வதென்றால் தமிழ் மக்கள் பேரவை அதிக உறுப்பினர்களைப் பெற்ற சபைகளை நிர்வகிக்க, தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்க வேண்டும். ஆனால் இங்கு மூன்றாவது இடத்திலிருக்கும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி எவருக்கும் உறுதியளிக்காது நழுவல் பாணியில் இருந்தாலும் ஓரிரு சபைகளையாவது தாங்களும் அமைக்க வேண்டுமென விருப்பம் காட்டியுள்ளது. இதனை ஒரேயடியாக தமிழரசுக் கட்சி ஓரங்கட்டி விட்டது.

மூன்று தமிழ்த் தேசியவாத கட்சிகளும் இணைந்து எந்தவொரு சபையையாவது அமைக்கக்கூடிய சாத்தியப்பாடு காணப்படவில்லை. கிட்டத்தட்ட ஆடு, புலி, புல்லுக்கட்டு ஆகிய மூன்றையும் ஒன்றாக கூட்டிச் செல்ல முடியாத கதை போன்றது இந்த நிலைவரம்.

தேர்தலுக்கு முன்னர் ஓரளவு ஒற்றுமையை கஜேந்திரகுமார் நாடினார். அதற்காக தமிழரசின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் வீட்டுக்குச் சென்று உரையாடி ஓர் ஆவணத்தையும் கையளித்தார். ஓரளவுக்கு நம்பிக்கையளிக்கக்கூடிய பதிலை சிவஞானம் அவர்கள் வழங்கியிருந்தாலும், அடுத்த சில நாட்களில் கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனின் ஆலோசனைக்கிணங்க கஜேந்திரகுமாரின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. தேர்தலின் பின்னர் ஆகட்டும் பார்க்கலாம் என்ற பாணியில் சிவஞானம் அவர்களின் பதில் கஜேந்திரகுமாரை அடைந்தது.

ஆனால், இப்போதுள்ள நிலைமையில் கஜேந்திரகுமாரின் ஆதரவு தமிழரசுக்கு தேவைப்படுகிறது. இதனால் அதனுடன் தொடர்பு கொண்ட சிவஞானம் அவர்கள் இதற்கென ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தார். தமிழரசுக் கட்சி தமக்கே பதவிகள் என்று கோர, அதிகூடிய உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு தலைவர் பதவியும், இரண்டாவது அதிகூடிய உறுப்பினர்களைக் கொண்ட கட்சிக்கு உபதவிசாளர் என்ற நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த கஜேந்திரகுமார் விரும்பவில்லை.


உதாரணத்துக்கு யாழ்ப்பாணம் மாநகரசபையை எடுத்தால் பதின்மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தமிழரசும், பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட கஜேந்திரகுமார் தரப்பும் இணைந்தால் இவர்களுக்குக் கிடைக்கும் இருபத்தைந்து எண்ணிக்கை அறுதிப் பெரும்பான்மையாகும். எந்தவிதமான இடைஞ்சலுமின்றி மேயர், உதவி மேயர் பதவிகளை இரு கட்சிகளும் பெற்றுக் கொள்ள முடியும். இது சாத்தியப்படுமா என்பது மாநகரசபையின் முதல் அமர்வின் தெரிவின் போது தெரியவரும். இதே போன்ற நிலைதான் மற்றைய சபைகளிலும்.

தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்தவர்கள் தமிழரசுக் கட்சியை உருவாக்கி எழுபத்தைந்து ஆண்டுகள் முடிவடைந்துவிட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இவர்களை பச்சை மண்ணும், சுட்ட மண்ணும் என்றே கூறிவருவார்கள். அதாவது ஒருபோதும் இணைந்து செயற்பட முடியாதவர்கள் என்பது இதன் அர்த்தம்.

தேவைப்படும்போது இணைவது போன்று காண்பதும், கலந்து கதைப்பதும், முடிவெடுக்க முடியாது முடிவில் கலைவதும், பின்னர் அறிக்கைகளால் மோதுவதும் - இதுவே தொடர்கதையாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷை ஆழமான குழப்பநிலைக்கு கொண்டுசெல்கிறார் யூனுஸ்



முஹம்மத் யூனுஸ் தலைமையிலான பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் இடையிலான முறுகல்நிலை இப்போது ஒன்றும் இரகசியமானது இல்லை. மியன்மாரில் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுவரும் றொஹிங்கியா இனத்தவர்களின் ராக்கைன் மாநிலத்துக்கு "மனிதாபிமான இடைவழி" ஒன்றை திறப்பதற்கான அரசாங்கத்தின் யோசனைக்கு எதிர்ப்பை இராணுவப் பேச்சாளர் கடந்த திங்கட்கிழமை பகிரங்கமாக வெளிப்படுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

இராணுவ அரசாங்கத்தின் ஒடுக்குமுறையினால் அவலத்துக்கு உள்ளாகியிருக்கும் றொஹிங்கியா மக்களுக்கு மருந்து வகைகள் மற்றும் உதவிகளை விநியோகிப்பதே அரசாங்கத்தின் திட்டம். ஆனால், அது பாதுகாப்புச் சவால்களைத் தோற்றுவிக்கும் என்று பங்களாதேஷ் இராணுவம் நம்புகிறது. மேற்றபடி மனிதாபிமான இடைவழி, சிட்டாகொங் துறைமுகத்தை வெளிநாட்டு முகாமைத்துவத்திடம் கையளிப்பது, எலான் மஸ்க்கின் செய்மதி இணையச் சேவையான ஸ்டார்லிங்கை அறிமுகம் செய்தல் உட்பட அரசாங்கத்தின் பல்வேறு செயற்திட்டங்கள் தொடர்பில் பங்களாதேஷ் இராணுவத் தளபதி ஜெனரல் வாகீர் - உஸ் - சமான் கடந்த வாரம் விசனத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய தீர்மானங்களை எடுக்கக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கக்கூடிய உறுதியான அரசாங்கம் ஒன்றை மக்கள் தெரிவு செய்வதற்கு வசதியாக விரைவில் தேர்தல்களை நடத்தவேண்டும் என்றும் இராணுவத் தளபதி அரசாங்கத்தை வலியுறுத்தினார். அதிகரித்துவரும் பிளவுக்கு மத்தியில், யூனுஸ் பதவியில் இருந்து இறங்கக்கூடும் என்ற ஊகங்கள் கடந்த வாரம் டாக்காவில் உலாவின. ஆனால், "யூனுஸ் தொடர்ந்தும் எங்களுடன் இருப்பார்" என்று அமைச்சரவை உறுப்பினர் ஒருவர் பிறகு கூறினார். ஆனால், இராணுவம் நடத்திய செய்தியாளர்கள் மகாநாடு "பனிப்போர்" முடிவுக்கு வரக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதை காட்டுகிறது.

ஷேய்க் ஹசீனாவின் நிருவாகத்தின் வீழ்ச்சியை அடுத்து மூன்று நாட்களில் மாணவர் குழுக்களின் ஆதரவுடன் 2024 ஆகஸ்ட் 8 இடைக்கால அரசாங்கத்தின் "பிரதம ஆலோசகராக" பதவியேற்றபோது யூனுஸ், அவாமி லீக்கின் எதேச்சாதிகார ஆட்சி நாட்களில் இருந்து பங்களாதேஷை ஜனநாயகத்தின் புதியதொரு விடியலுக்கு வழிநடத்திச் செல்லப் போவதாக உறுதியளித்தார். ஆனால், தற்போது ஒன்பது மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், நாட்டில் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் வன்முறைக் கும்பல்களை கட்டுப்படுத்துவதற்கும் மல்லுக் கட்டிக் கொண்டிருக்கிறார்.

பங்களாதேஷின் மிகப்பெரிய அரசியல் கட்சிகளில் ஒன்றான அவாமி லீக்கிற்கு எதிராக அரசாங்கம் மேற்கொள்ளும் அடக்குமுறை நடவடிக்கைகள் சகல தரப்புகளையும் உள்ளடக்கிய தேர்தல் பற்றிய நம்பிக்கைகளை மேலும் சிதறடிக்கின்றன.

அவாமி லீக்கின் பெரும்பாலான மூத்த தலைவர்கள் ஒன்றில் வெளிநாடுகளில் அஞ்ஞாதவாசம் செய்கிறார்கள் அல்லது தலைமறைவாக வாழ்கிறார்கள். அந்த கட்சியின் நூற்றுக்கணக்கான தொண்டர்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள்.

மே மாத ஆரம்பத்தில் அவாமி லீக்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தடைசெய்தது. மாணவர் குழுக்களின் தலைவர்கள் மற்றும் இஸ்லாமியவாத குழுக்களிடம் இருந்து வந்த நெருக்குதல்களுக்கு பணிந்தே அரசாங்கம் அவ்வாறு செய்தது. யூனுஸூம் ஹசீனாவின் வீழ்ச்சிக்கு பிறகு மாணவர் தலைவர்களினால் நிறுவப்பட்ட தேசிய பிரஜைகள் கட்சி உட்பட அவரின் நேசசக்திகள் தேர்தல்களை அடுத்த வருட நடுப்பகுதியில் மாத்திரமே நடத்தக் கூடியதாக இருக்கும் என்று கூறுகிறார்கள். தேர்தல் சீர்திருத்தங்களையும் அரசியல் சீர்திருத்தங்களையும் செய்யவேண்டிய தேவை இருப்பதாக அதற்கு அவர்கள் காரணமாகக் காட்டுகிறார்கள்.

ஆனால், தேர்தலை நடத்துவதில் தொடர்ந்து காண்பிக்கப்படும் தாமதத்தை ஆட்சேபித்து பங்களாதேஷ் தேசியவாத கட்சியினர் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியிருப்பதுடன் இராணுவமும் பகிரங்கமாக கண்டனம் தெரிவித்திருக்கிறது. அரசாங்க கருவிகளையும் அரசாங்கம் சாரா கருவிகளையும் பயன்படுத்தி அவாமி லீக்கை அடக்குவதுடன் வன்முறைக் கும்பல்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத் தவறி, தேர்தலை பின்போடுவதன் மூலம் மக்களால் தெரிவு செய்யப்படாத ஒரு தலைவரான யூனுஸ் பங்களாதேஷை ஆழமான குழப்ப நிலைக்கும் நிச்சயமற்ற நிலைக்கும் கொண்டு செல்கிறார்.

பங்களாதே/க்கு அவசரமாகத் தேவைப்படுவது தெளிவான மக்கள் ஆணையுடன் கூடிய உறுதிவாய்ந்த ஒரு அரசாங்கமேயாகும். சகல அரசியல் கட்சிகள், குழுக்களின் பங்கேற்பை உறுதிசெய்து சாத்தியமானளவு விரைவான ஒரு சந்தர்ப்பத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கே இடைக்கால அரசாங்கமும் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

(தி இந்து ஆசிரிய தலையங்கம்)



# தனித்துப் போட்டி: என்னவாகும் சீமானின் வாக்குகள்?

பீ.ஜெபலீன் ஜான்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மீண்டும் தனித்துப் போட்டி என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்துள்ளார். விஜய் கட்சியின் வரவால் நாம் தமிழர் கட்சியின் வாக்கு வங்கி என்னவாகும் என்பது அரசியல் அரங்கில் பேசுபொருளாகியிருக்கும் நிலையில், தனித்துப் போட்டி என்ற சீமானின் அறிவிப்பு பலரின் புருவத்தை உயர்த்த வைத்திருக்கிறது.

கோவை கொடிசியா மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழ் தேசிய இன எழுச்சி நாள் பொதுக் கூட்டத்தில், 2026 பேரவைத் தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டி என சீமான் அறிவித்தார். நாம் தமிழர் கட்சிக்கு இதுவரை கிடைத்த வாக்குகள் என்னவாகும் என்பதை இதுவரை அந்தக் கட்சி சந்தித்த தேர்தல்களின் முடிவுகளைப் பார்த்தால் முழுமையாக அறியலாம்.

2016 பேரவைத் தேர்தலில் ஜெயலலிதா, கருணாநிதி என இரு பெரும் மக்கள் ஈர்ப்பு மிக்க ஆளுமைகளை மையப்படுத்தி நடந்த தேர்தலில் சீமானால் 1.13 சதவீத வாக்கு வங்கியைத்தான் பெற முடிந்தது. திமுக, ஒரு சதவீத வாக்கு வங்கி வித்தியாசத்தில் ஆட்சியைப் பிடிக்க முடியாமல் போனது.

இரு பெரும் ஆளுமைகள் மறைந்த நிலையில், 2019 மக்களவைத் தேர்தலில் மோடி, ராகுல் காந்தி என்ற இரு பிரதமர் வேட்பாளர்கள், பண பலம், ஜாதி பலம், அதிகார பலம் கொண்ட மத்திய, மாநிலக் கட்சிகளின் கூட்டணி, ஆளும் கட்சிக் கூட்டணிகளுக்கு எதிலும் சளைக்காத எதிர்க்கட்சிகள் கூட்டணி, மிகப் பெரிய திரையுலக நட்சத்திரமான கமல்ஹாசனின் அரசியல் பிரவேசம், ஜெயலலிதா, சசிகலாவிடம் அரசியல் பயின்ற டி.டி.வி. தினகரனின் அமமுக தனியாகக் களம் கண்டது போன்றவற்றால் பண பலம், அதிகார பலம் இல்லாத சீமானின் கட்சி நிச்சயம் காணாமல் போய்விடும் என்ற விமர்சனம் எழுந்தது.

அவற்றைப் புறந்தள்ளும் வகையில் தனித்துக் களம் கண்ட நா.த.க., 3.87 சதவீத வாக்குகள் பெற்று தனது வாக்கு வங்கியை மும்மடங்கு பெருக்கிக்கொண்டது, அனைவருக்கும் வியப்பை ஏற்படுத்தியது.

சீமானைவிட கூடுதலாக டி.டி.வி. தினகரன் 5.5 சதவீத வாக்குகளையும், குறைவாக கமலஹாசன் 3.78 சதவீத வாக்குகளையும் பெற்றிருந்தனர். ஆனால், சீமானின் வாக்கு வங்கி தமிழகம் முழுவதும் ஒரே சீராக இருந்தது. தினகரனின் வாக்கு வங்கி முக்குலத்தோர் அதிகம் வசிக்கும் டெல்டா, தென்மாவட்டங்களில் மட்டும் அதிகமாகவும், அதாவது 21 தொகுதிகளில் மூன்றாவது இடமும், பிற தொகுதிகளில் குறைவாகவும் இருந்தது.

கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சிக்குக்கூட, பிராமணர்கள், பிற மொழி பேசும் நாயுடு, செட்டியார், சௌராஷ்டிர சமூகத்தினர் அதிகம் வசிக்கும் தொகுதிகள் மற்றும் நகர்ப்புற தொகுதிகளான தென்சென்னை, மத்திய சென்னை, வட சென்னை, சிறிபெரும்புதூர், திருவள்ளூர், கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், மதுரை உள்பட 11 தொகுதிகளில்தான் மூன்றாவது இடம் கிடைத்தது.

குறிப்பிட்ட மண்டலங்களில் மட்டுமே தினகரன், கமல்ஹாசன் கட்சி அதிகமாகவும், பிற பகுதிகளில் குறைவாகவும் வாக்குகளைப் பெற்ற நிலையில், 6 இடங்களில் மட்டும்தான் நா.த.க. 3-ஆவது இடத்தைப் பிடித்தது. ஆனாலும், 39 தொகுதிகளிலும், புதுவையிலும்கூட சீரான வாக்குகளை சீமான் கைப்பற்றினார். 3.87 சதவீத வாக்குகள் பெற்ற சீமானின் நாம் தமிழர் கட்சி தொடர்ந்து நடந்த இடைத்தேர்தல்களில் போட்டியிட்டது. தினகரன், கமல்ஹாசன் ஆகியோர் ஒதுங்கிக்கொண்டனர்.

மூன்றாவது முறையாக 2021 பேரவைத் தேர்தலை நாதக சந்தித்தபோது, சீமானால் கூடுதல் வாக்குகளைப் பெற முடியாது என மீண்டும் விமர்சிக்கப்பட்டது. ஆனால், 2016 பேரவைத் தேர்தலுடன் ஒப்பிடும்போது ஆறு மடங்கு அதிகமாகவும், 2019 மக்களவைத் தேர்தலுடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட இரு மடங்கு அதிகமாகவும், அதாவது வாக்கு வங்கியை 6.58 சதவீதமாக உயர்த்தி தனது இருப்பை நிலைநிறுத்திக்கொண்டார் சீமான்.

சீமான் கட்சியின் வாக்கு வங்கி உயர்ந்த நிலையில், தினகரன், கமல்ஹாசன் ஆகியோரது கட்சிகளின் வாக்கு வங்கி 2.5 சதவீதமாக சுருங்கியது. நாதக 177 தொகுதிகளில் மூன்றாவது இடத்தைப் பிடித்தது. அமமுகவால் ஓரிடத்தில் இரண்டாவது இடத்தையும், 24 இடங்களில் மூன்றாவது இடத்தையும்தான் பிடிக்க முடிந்தது. கமலின் ம.நீ.ம. ஒரு தொகுதியில் 2-ஆவது இடத்தையும், 25 இடங்களில் 3-ஆவது இடத்தையும் மட்டுமே பெற்றது.

இதன் பிறகு பிரதமர் வேட்பாளரை முன்னிறுத்தி நடந்த 2024 மக்களவைத் தேர்தலிலும்கூட நா.த.க.-வின் வாக்கு வங்கி 8.22 சதவீதமாகி அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக மாறியது.

இந்நிலையில்தான் [illegible] கட்சியை விஜய் தொடங்கிய ஓராண்டில் அவர் செல்லுமிடமெல்லாம் நிரம்பி வழியும் ரசிகர்கள் மற்றும் கட்சித் தொண்டர்களின் கூட்டம், பெண்கள், இளைஞர்கள் மத்தியில் பெருகும் எதிர்பார்ப்பு போன்றவை அவரது அரசியலுக்கு கூடுதல் முக்கியத்துவத்தை ஏற்படுத்தி வருகிறது. விஜய் - சீமான் இடையே கூட்டணி ஏற்படலாம் என்றும்கூட அவ்வப்போது கிசுகிசுக்கப்படுகிறது. ஆனாலும் தனித்துப் போட்டி என்ற முடிவை சீமான் அறிவித்து, அந்த வதந்திகளுக்கு தற்போதைக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

தொடர்ந்து ஐந்து முறை தனித்துப் போட்டியிட்ட நா.த.க., பெரியார் ஈ.வெ.ரா. எதிர்ப்பு, காங்கிரஸ் பாஜக, திமுக, அதிமுக என 4 கட்சிகள் மீதும் கடும் விமர்சனம், ஏழை மக்கள் பிரச்னைகளுக்காக தொடர்ந்து போராடுவதை அரசியல் உத்தியாகக் கொண்டுள்ளது.

இது குறித்துக் கேட்டதற்கு சீமான் விரிவாகப் பதிலளித்தார். "2016 முதல் இதுவரை சீமான் வாக்கு வங்கி குறையும் எனக் கருத்துருவாக்கம், கருத்துக் கணிப்புகள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால், தொடர்ந்து தனித்துப் போட்டியிட்டு 1.1 சதவீதத்தில் இருந்து 8.22 சதவீத வாக்குகளை ஒரு ரூபாய்கூட கொடுக்காமல் உயர்த்தி, அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகத் தகுதி பெற்றுள்ளோம். கமல்ஹாசன், டிடிவி.தினகரன் அரசியல் பிரவேசம் செய்யும்போது சீமான் வாக்குகள் குறையும் என்ற கருத்துருவாக்கத்தை ஊடகங்கள் ஊதிப் பெரிதாக்கின.

ஆனால், பொதுத் தேர்தல்கள், இடைத்தேர்தல்களைப் புறக்கணிக்காமல் தொடர்ந்து போட்டியிட்டதால் நா.த.க.வுக்கு மக்கள் அங்கீகாரம் கொடுத்தனர். கடந்த மக்களவைத் தேர்தலில் நாடுமுழுவதும் எந்த ஒரு அரசியல் கட்சியும் தனித்து நின்று வாக்கு வங்கியை உயர்த்தாத நிலையில், நா.த.க. மட்டுமே வாக்கு வங்கியை உயர்த்தியது. மாயாவதியின் பிஎஸ்பி, சுக்பர் சிங் பாதலின் அகாலிதளம், சந்திரசேகர் ராவின் பிஆர்எஸ் போன்ற கட்சிகளின் வாக்கு வங்கிகள்கூட கரைந்த நிலையில், நா.த.க. நான்குமுனைப் போட்டியில் தொடர்ந்து அதன் இருப்பை தக்கவைத்து வருகிறது. ஒளிவட்ட நடிகர்கள் வந்தாலும் சரி, ஜாதி, பலமிக்க அரசியல் கட்சிகள் வந்தாலும் சரி எங்களுக்கு கவலையில்லை. கடந்த முறையைவிட மூன்று மடங்குக்கு மேல் வாக்கு சதவீதத்தைப் பெறுவதுடன் இம்முறை பேரவைக்குள் நா.த.க. எம்எம்எல்ஏ.க்கள் நுழைவது உறுதி," என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கான அரசியல் - அரசியலுக்கான தேர்தல்:

## தமிழ் மக்களுக்கு அவசியமானது எது?

கந்தையா அருந்தவபாலன்

அரசியல், தேர்தல் என்ற இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. அதுவும் ஜனநாயக ஆட்சி நிலவும் நாடுகளில் அரசியலில் தேர்தல்கள் அடிப்படையானவை. எனினும் முன்னேறிய ஜனநாயக ஆட்சி நிலவும் நாடுகளின் தலைவர்கள் அல்லது ஆட்சியாளர்கள் தேர்தல்களை நோக்காகக் கொண்டு ஆட்சியை அல்லது அரசியலை முன்னெடுப்பது ஒப்பீட்டு அடிப்படையில் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்படுகிறது. ஆனால் வளர்ந்துவரும் ஜனநாயக நாடுகளில் இதற்கு எதிரான நிலைமை காணப்படுகிறது. ஆட்சியிலிருப்பவர்களும் சரி எதிர்த்தரப்பில் இருப்பவர்களும் சரி நாடு, மக்கள் என்பவற்றைவிட அடுத்துவரும் தேர்தல் வெற்றியைப் பிரதான நோக்காகக் கொண்டு தமது ஆட்சியையும் அரசியலையும் முன்னெடுக்கவே விரும்புகின்றனர். இதற்கு இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் சிறந்த எடுத்துக்காட்டு.

ஆனால் ஒரு நாட்டில் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காகப் போராடிவரும் தேசிய இனமொன்று தனது அரசியலைத் தேர்தல்களை நோக்காகக் கொண்டு முன்நகர்த்த வேண்டுமா அல்லது தனது அரசியல் நோக்கத்துக்காகத் தேர்தல்களைக் கையாள வேண்டுமா என்பது முக்கியமானதொரு கேள்வியாகும். அதாவது தேர்தலுக்கான அரசியலாக மட்டும் இருக்கவேண்டுமா அல்லது தேசத்தின் விடுதலைக்கான அரசியலாக இருக்க வேண்டுமா என்பது. இக்கேள்வி தமிழ்த் தேசிய அரசியலுக்கும் பொருந்தும். தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்து இக்கேள்விக்கான விடை, தேர்தல்கள் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றடுப்பதற்கான அதாவது தமிழ்த் தேசத்துக்கான கருவிகளில் ஒன்றாகக் கையாளப்பட வேண்டுமேயன்றி தேர்தலுக்கான அரசியலாக அது ஒருபோதும் இருக்கக்கூடாது என்பதேயாகும்.

இதில் தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்கள் தெளிவாக உள்ளனரா? ஆம் என்று அடித்துக்கூறும் வகையில் அத்தலைவர்களின் தற்போதைய அரசியல் முன்னெடுப்புகள் அமையவில்லை என்பதே யதார்த்தமான விடையாகும். தேர்தல் பரப்புரைகளில் தமிழர் தேசத்துக்கான அரசியல் கோரிக்கைகள் மையப்பொருளாக அமைகின்றனவேயன்றி அக்கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு அத்தேர்தல் முடிவுகளை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான தெளிவான நோக்குகள் அத்தலைவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் போன்றவற்றில் மட்டுமல்ல முன்னைய தேர்தல்களிலும் இதே நிலைமைதான். தமிழ்த் தேசிய அரசியலிலுள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உயர்ந்தமட்ட சமஷ்டி என்பதில் ஒருமித்து நிற்கின்றனர். அதனையே தேர்தலிலும் மக்களிடம் முன்வைக்கின்றனர். கோரிக்கையில் ஒன்றுபடும் தலைவர்கள் அதனை மக்களிடம் கொண்டு செல்வதில் ஒன்றுபடாது தனித்தனியாக நிற்பதுடன் ஒருவரையொருவர் விமர்சிப்பதற்கும் அவர்கள் தயக்கம் காட்டுவதில்லை.

தமிழ் அரசியல் தலைவர்கள் ஒவ்வொருவரும் தாமும் தமது கட்சியுமே சிறந்தது என நிறுவத் தலைப்படுகின்றனர். அவ்வாறாயின் மக்கள் யாரை ஏற்றுக்கொள்வது? யாரை நிராகரிப்பது? எடுத்துக் காட்டாகக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசிய கட்சிகள் பகிஷ்கரிப்பு, பொது வேட்பாளர், சஜித்துக்கு ஆதரவு என மூன்று திசைகளில் மக்களுக்கு வழிகாட்டினர். மக்களோ எந்த வழியில் பயணம் செய்வது எனத் தடுமாறினர். இறுதியில் எதுவும் மக்களை வெற்றிப்பாதையில் கொண்டு செல்லவில்லை என்பதே கசப்பான அனுபவம். இதனால் தலைவர்கள் தமது கட்சிக்காகவும் பதவிகளுக்காகவும் தம்மை ஏமாற்ற முயல்கிறார்களா என்று



> எதிரெதிர் துருவங்களாக நின்ற தலைவர்களை ஒரே குடையின்கீழ் கொண்டு வந்து அதன்பால் மக்களையும் ஓரணியில் திரட்டி தேர்தல்களில் உச்ச வெற்றியைப் பெற்றதுடன் தேசத்துக்கான அரசியலில் தேர்தல்கள் எவ்வாறு பங்களிக்க முடியுமென்பதை விடுதலைப் புலிகளிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் எண்ணத் தலைப்படுகிறார்கள். அதனால் தலைவர்கள் மீது மக்கள் ஐயமும் அதிருப்தி கொள்வது தவிர்க்க முடியாததொன்றாக மாறிவிடுகின்றது. விளைவு, தேர்தல்கள் தமிழ்த் தேசத்துக்கான அரசியலை முன்னகர்த்துவதற்குப் பதிலாக பின்னடைவுகளுக்கு வழிவகுத்துவிடுகின்றன. அதனை நாம் சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் காண முடிந்தது. அத்துடன் அது நிற்கவில்லை. மழை விட்டாலும் தூவானம் குறையவில்லை என்பது போல அதன்தாக்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் பிரதிபலித்துள்ளது.

தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்து இரு விடயங்கள் துருத்திக்கொண்டு நிற்பதை அவதானிக்க முடிகிறது. ஒன்று கடந்த காலத்தில் மக்களிடையே கட்டி வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசிய உணர்வை தேர்தல் வெற்றிக்கான மூலதனமாக பயன்படுத்த முனைவது. இரண்டாவது தம்மையும் தமது கட்சியையும் மட்டும் தமிழ் மக்களின் ஏகோபித்த பிரதிநிதிகளாக மாற்றுவதற்காக முனைவது. இவை இரண்டுமே தேர்தலுக்கான அரசியலேயன்றி தேசத்துக்கான அரசியலன்று. தமிழ்த் தேசத்துக்கான அரசியல் என்பது கட்சிகள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கானதல்ல. தமிழ் மக்களுக்கான ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கானது. இதனால் அவையிரண்டும் தமிழ்த் தேசிய அரசியலுக்கு ஆரோக்கியமான விடயங்களல்ல. தமிழ்த் தேசிய உணர்வு என்பது தமிழ் மக்களின் கூட்டுணர்வாகும். அதைப் பங்கு




போட எண்ணுவதும் அதை தமக்கான அறுவடைக்கு மட்டும் பயன்படுத்த எண்ணுவதும் தவறாகும். அந்த உணர்வை கட்டிக்காப்பதும் மேலும் வளர்ப்பதுவுமே இன்றைய தேவைப்பாடாகும். இதனைக் கூட்டாகவே செய்ய முடியும். இல்லையெனில் காலப்போக்கில் அவ்வுணர்வு மங்கிவிடும். ஆயுதப்போர் நிறைவடைந்த பின்னரான இன்றுவரையுள்ள காலப்பகுதி எமக்கு இதை உணர்த்தி நிற்கிறது. இதேபோலவே தமது கட்சியை மட்டும் முதன்மைப்படுத்த விளைவது கட்சிகளுக்கிடையிலான போட்டிகளையும் அதனால் மக்களிடையே பிளவையும் குறுகிய மனப்பாங்கையும் வெறுப்பையும் அதிகரிக்குமேயன்றி மக்களை ஒன்று திரட்டுவதற்கு ஒருபோதும் உதவப்போவதில்லை. தேசத்தின் வெற்றி என்பது மக்கள் மனதில் மறக்கடிக்கப்பட்டு தேர்தலில் தமது கட்சிக்கான வெற்றி என்ற எண்ணத்தையே அது மேலோங்கச் செய்கிறது. மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான அரசியல் என்பது மக்களைத் தேசமாக ஒன்று திரட்டுவதற்கான அரசியலேயன்றி அவர்களைப் பலவாறாகக் கூறுபோடுவதற்கானதல்ல.

தலைவர்கள் மக்களைத் தொடர்ந்து தேர்தல் பற்றிய சிந்தனைகளிலும் அதற்கான முனைப்புகளிலும் வைத்திருக்க முனைவதும் தேசத்துக்கான அரசியலில் பின்னடைவையே ஏற்படுத்தும். வடக்கு மாகாணசபைக்கான தனது கட்சியின் முதலமைச்சர் வேட்பாளன் தானேயென அண்மையில் சுமந்திரன் வெளிப்படுத்தியமையும் இவ்வாறானதொன்றே. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் பேரினவாத கட்சிகளுக்கெதிராகத் தமிழ்த் தேசிய உணர்வைத் தட்டியெழுப்பி கட்சிகள் பெற்ற வெற்றி தொங்கு நிலையில் இருக்கும்போது, அதற்கு நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வொன்றைக் கண்டு உறுதியான சபைகளை அமைத்து மக்களுக்குச் சிறப்பாகப் பணியாற்றுவதன் மூலம் மக்களிடையே நம்பிக்கையை வளர்ப்பது எப்படி என்று சிந்திக்க வேண்டிய நேரத்தில் சுமந்திரனின் இந்த அறிவிப்பு முதலமைச்சர் பற்றியும் மாகாணசபைத் தேர்தல் பற்றியுமே எல்லோரையும் சிந்திக்க வைத்திருக்கிறது. அது தொடர்பான வாதங்களும் எதிர்வாதங்களும் ஊடகங்களை நிறைத்து நிற்கின்றன. நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளை எவ்வாறு தேச அரசியலை வளப்படுத்துவதற்குப் பயன்படுத்துவது என்று சிந்திப்பதை விடுத்து அடுத்த தேர்தல் அரசியலுக்குள் மக்களைத் தள்ளும் முயற்சியாகவே இது அமையும். புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படும்போது தமிழ்த்தரப்பு ஒற்றுமையாக ஒரேநிலைப்பாட்டில் செயற்படுவதற்கான கஜேந்திரகுமாரின் முன்னெடுப்பை இப்போது அது அவசியமில்லை, அரசியலமைப்பு உருவாக்கும்போது அது பற்றிச் சிந்திக்கலாம் என்று தட்டிக்கழித்த சுமந்திரன் தேர்தல் நடக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லாத மாகாணசபைக்கு தானே முதலமைச்சர் வேட்பாளர் என்று அறிவித்தமை முரண்நிலை மட்டுமன்றி மக்களைத் தொடர்ந்து தேர்தல் அரசியலுக்குள் கட்டிப்போடுவதற்கே வழிவகுக்கும்.

தேர்தல்களை தேச அரசியலை முன்னெடுப்பதற்கு எவ்வாறு கையாள்வது என்பதற்கு விடுதலைப்புலிகள் வழிகாட்டியாக உள்ளனர். எதிரெதிர் துருவங்களாக நின்ற தலைவர்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்து அதன்பால் மக்களையும் ஓரணியில் திரட்டி தேர்தல்களில் உச்ச வெற்றியைப் பெற்றதுடன் தேசத்துக்கான அரசியலில் தேர்தல்கள் எவ்வாறு பங்களிக்க முடியுமென்பதை அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள முடியும். விடுதலைப் புலிகள் காலத்தை இன்றைய காலத்துடன் ஒப்பிட முடியுமா என்பது நியாயமானதொரு கேள்வி. அரசியல் கள நிலைமை மாறிவிட்டதேயன்றி மக்களும் அவர்களது அரசியல் நோக்கங்களும் இன்றும் அவ்வாறே உள்ளன. அவர்களை ஜனநாயக வழிமுறைகளில் அந்நோக்கத்தை நோக்கி அழைத்துச் செல்வதற்கான பொருத்தமான தலைமைத்தவமே இன்றைய தேவையாகும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நூலக எரிப்பின் 44 ஆண்டுகள்



## 'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த காட்டுமிராண்டிகளும் வெட்கப்படுவர்'

மாலி

1981 ஜூன் முதலாம் திகதி, யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்ட நாள்.

யாழ்ப்பாணத்தில், மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல்களுக்கான கடைசி பிரச்சாரக் கூட்டத்தில், முதல்நாள் மே 31ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட அசம்பாவிதங்களையடுத்து யாழ்ப்பாண நகரில் ஆரம்பித்த தீ வைப்புச் சம்பவங்களில், மறுநாள் ஜூன் முதலாம் திகதி இரவு 'ஈழநாடு' அலுவலகமும் யாழ்.பொது நூலகமும் தீவைக்கப்பட்டன. அச்சுயத்திரங்கள் ஈழநாடு அலுவலகத்தில் எரிந்து கருகியபோது, அரும் பொக்கிஷங்களுமாக, 95 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் பொது நூலகத்தில் எரித்து சாம்பராக்கப்பட்டன.

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நான்கு பொலிஸார் சுடப்பட்டதில் இக் களேபரம் தொடங்கியது. இவர்களில் இருவர் மரணமடைந்திருந்தார்கள். அன்று இரவு, நகரில் பல கடைகளுடன், யாழ்ப்பாண வைத்திய சாலையின் தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில், கூட்டணியின் யாழ்ப்பாணம் எம். பி., வெ. யோகேஸ்வரனின் இல்லமும், யாழ். பிரதான வீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயமும் முற்றாக தீவைக்கப்பட்டன.

மே 4ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் கடமைகளுக்கான தேர்தல் உத்தியோகத்தர்கள் என்ற போர்வையில், தென்னிலங்கையிலிருந்து 39 பஸ் வண்டிகளில் கொண்டுவரப்பட்ட காடையர்களும் பொலிஸாருமாக இந் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஜே. ஆர். ஜயவர்த்தன அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களான சிறில் மத்தியூவும், காமினி திஸாநாயக்கவும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து, இந் நடவடிக்கைகளை கண்காணித்தனர். ஜனாதிபதி ஜயவர்த்தன இவர்களை அனுப்பிவைத்திருந்தார். அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, விமலா கன்னங்கரா ஆகியோரும் வந்திருந்தனர்.

யாழ் நூலக எரிப்பில், சிறில் மத்தியூவுடன் காமினி திஸாநாயக்க, லலித் அத்துலத்முதலி ஆகியோரை ஜனாதிபதி பிரேமதாஸ பின்னர் நேரடியாகவே குற்றம் சுமத்தினார். நூலகம் எரிக்கப்பட்டவேளையில் பொலிஸ் மா அதிபருங்கூட யாழ்ப்பாணத்திலிருந்தார்.

ஒரு வாரத்துக்கும் மேலாக யாழ்ப்பாணத்தில் இச் சம்பவங்கள் தொடர்ந்தன.

தேர்தல் அலுவல்களில் திருகோணமலையில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம், 3ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்தபோது, அன்று நள்ளிரவின் பின்னர் அவரும் நல்லூர் எம். பி., மு. சிவசிதம்பரம், மானிப்பாய் எம். பி., வி. தர்மலிங்கம், சாவகச்சேரி எம். பி., வி. என். நவரத் தினம் ஆகியோரும் கைது செய்யப்பட்டு, பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர்.

பின்னர், மறுநாள் தேர்தல் தினம் 4ஆம் திகதி காலையில், இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

மே 9ஆம் திகதி, யாழ்ப் பாணத்தின் இச் சம்பவங்கள் தொடர்பில் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் வழக்குரைத்தார். அமிர்தலிங்கத்தின் மிகச் சிறந்த பாராளுமன்ற விவாதங்களில் ஒன்று இது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த காட்டுமிராண்டிகளும் வெட்கப்படும்படியான செயல் என்றார்.

அமிர்தலிங்கம் பேச எழுந்தவுடனேயே, ஒழுங்குப் பிரச்னை ஒன்றை எழுப்புவதாக எழுந்த பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில் பெர்னான்டோ, 'கொலைகாரர்கள் இச் சபையில் பேச முடியுமா?' என்றார்.

'விசர் நாய்களைக் கூண்டில் அடையுங்கள்' என்று, மறுவிநாடி அதிர்ந்த அமிர்தலிங்கத்தின் கர்ஜனையில், நெவில் பெர்னான்டோ தனது கூற்றை வாபஸ் பெறவைத்தார் சபாநாயகர்.

அமைச்சர்கள் சிறில் மத்தியூ, காமினி திஸாநாயக்க ஆகியோர் மீது யாழ்ப்பா ணத்தின் இச் சம்பவங்கள் தொடர்பில் சபையில் நேரடியாகவே குற்றம் சுமத்தினார் அமிர்தலிங்கம். சபையில் ஏற்பட்ட பலத்த அமளியில், இதுதொடர்பில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஏற்கனவே தீர்மானித்ததில், இந்த இரு அமைச்சர்களையும் இச் சபையின் 'தரையில் உருட்டுவோம்' என்றார்.

ஏனைய எதிர்க்கட்சிகளான சிறிலங்கா சுதந்திர கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுடன் இணைந்து, அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு சபாநாயகரிடம் முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டது. அப்போது, அரசாங்கம் எதிர்கொண்ட இந்த நெருக்கடியை தவிர்க்கும் 'கிழநரி'யின் தந்தரமாகவே, அரசாங்கத்தின் 32 எம். பி.க்கள் ஒப்பமிட்ட, எதிர்க்கட் சித் தலைவர் அமிர்தலிங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

1981 ஜனவரியில் மதுரை தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு சென்றிருந்த வேளையில், இந்திய பத்திரிகைகளான 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'தினத்தந்தி' ஆகியவற்றுக்கு அளித்த பேட்டியில் அமிர்தலிங்கம் தெரிவித்திருந்த கருத்துக்கள் தொடர்பில், அவர்மீது இந்த நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டது.

இரண்டு நம்பிக்கையில்லா பிரேரணைகளும் சபை ஒழுங்கு பத்திரத்தில் விவாதத்துக்கான திகதி குறிப்பிடப்படாமலேயே இடம்பெற்றிருந்தபோது, எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான பிரேரணை முதலில் விவாதத்துக்கு வந்தது. டாக்டர் நெவில் பெர்னான்டோ பிரேரணையை முன்மொழிந்தார்.

ஒரே தினத்திலேயே இரண்டு நம்பிக்கையில்லா பிரேரணைகளுக்குமான முன்னறிவித்தல் சபாநாயகரிடம் கொடுக்கப்பட்டிருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிரான பிரேரணை முன்னறிவித்தலை தாம் முதலில் பெற்றதாக தெரிவித்து, சபாநாயகர் பாக்கீர் மார்க்கார் அதனை நியாயப்படுத்தினார்.

யாழ்ப்பாண நூலகமும், ஈழநாடு நிறுவனமும் எரிக்கப்பட்ட மூன்று வாரங்களில் இலங்கையில் சர்வசன வாக்குரிமையின் ஐம்பது ஆண்டுகள் நிறைவையொட்டிய பொதுநல நாடுகள் அமைப்பின் இரண்டு நாள் கருத்தரங்கு கொழும்பில் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்ட பத்தில் நடைபெற்றது. இவ் வேளையில் அமிர்தலிங்கம் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, இந்தியா ஆகிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

யாழ். நூலக எரிப்பு தொடர்பில் இங்கிலாந்தில் அமிர்தலிங்கத்தின் பிரச்சாரம், கொழும்பில் ஜயவர்த்தனவுக்கு தலையிடியானது.

யாழ்ப்பாண சம்பவங்களுக்கு கண்டனம் தெரிவித்து, தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுநல நாடுகள் மாநாட்டைப் பகிஷ்கரிக்க தீர்மானித்திருந்தது. ஆனாலும், 25 நாடுகளின் 115 பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்துகொண்ட போது, கொழும்பில் மு. சிவசிதம்பரமும் வி. என். நவரத்தினமும் விரிவான பிரசுரங்களுடன், இவர்களிடையே தீவிர பிரச்சாரங்களில் ஈடுபட்டனர்.

ஜூன் 25ஆம் தேதி, இந்த மாநாட்டைத் தொடக்கிவைத்து பேசுகையில்தான் ஜே. ஆரின் 'பிரபலமான' பேச்சொன்றான அப் பேச்சு இடம் பெற்றது:

"பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலிருந்து எமக்கு பல கடிதங்களும் தந்திகளும் வந்திருக்கின்றன. இவை, உண்மை தெரியாமல் அனுப்பப்பட்ட கண்டனங்கள். ஆனால், நான் இவர்களுக்கு கூறுகிறேன், உங்கள் அலுவல்களை நீங்கள் கவனியுங்கள். எங்கள் விடயங்களில் தலையிட வேண்டாம். ஐரிஷ் பிரச்னைக்கு நீங்கள் முதலில் தீர்வைக் காணுங்கள்."

"யாழ்ப்பாணத்தில் நூலகம் ஒன்று எரிந்திருக்கிறது. இது தொடர்பில் நாம் விசாரணை செய்வோம்" - ஜே. ஆர். சொன்னார்.

ஜே. ஆரின் பேச்சின் பின்னரான இடைவேளையில், பத்திரிகையாளர் கூடத்தில் அவரின் அப்பேச்சு சிலாகிப் புக்குள்ளாகியிருந்தது.

கிளாரன்ஸ் பெர்னான்டோ அப்போது 'றொய்ரேர்ஸ்' செய்தி நிறுவனத்தின் நிருபராகவிருந்தவர். சிரேஷ்ட பத்திரிகையாளர் - மதிப்பானவர். அவர் சொன்னார்

"அமிர்தலிங்கம் இல்லாத துணிச்சல் ஜே. ஆருக்கு. அமிர்தலிங்கம் இங்கு இருந்திருந்தால், ஜே. ஆர். இப்படிப் பேசித் தப்பித்திருக்க முடியாது".

ஆக, இவை எல்லாவற்றினதும் 'அறுவடை'தான் 1983 ஜூலை கலவரம். ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோல்டன் டோம் திட்டத்தில் கனடா இணையுமா?

# 51வது அமெரிக்க மாநிலமாக மாற்ற ட்ரம்ப் திட்டம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

கோல்டன் டோம் திட்டத்தில் கனடா இணைய 61 பில்லியன் டாலர் தர வேண்டும், அல்லது அமெரிக்கா உடன் இணைந்தால் கனடா ஒரு டாலரையும் தர அவசியமில்லை என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கோல்டன் டோம் - அமெரிக்காவை பாதுகாக்க 175 பில்லியன் டாலர் செலவில் உருவாக்கப்படும் புதிய வான் ராணுவக் கட்டமைப்பு ஆகும். இதற்கான ஒப்புதலை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அண்மையில் வழங்கியுள்ளார்.

இந்த கோல்டன் டோம் கப்பலில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள், பாலிஸ்டிக் ஏவுகணைகள், ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள், ட்ரோன்கள் என எந்த ஏவுகணையாக இருந்தாலும், அதுவும் அவை சாதாரணமானது அல்லது அணு ஆயுதம் என எதுவாக இருந்தாலும் தோற்கடிக்கும் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கும். அமெரிக்காவை விண்வெளியில் இருந்து தாக்கினால் கூட இந்தக் கட்டமைப்பு தடுத்துவிடும் ஆற்றலைக் கொண்டதாகும்.

இந்தக் வான் பாதுகாப்பு கட்டமைப்பில் தாங்களும் இணைந்து கொள்ள கனடா விருப்பம் தெரிவித்துள்ளதாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார். பிரமாண்டமான கோல்டன் டோம் கட்டமைப்பு உருவாக்கத்தில் பங்குகொள்ள கனடா விருப்பம் தெரிவித்துள்ளது.

ஆனாலும் அமெரிக்கா உடன் இணையமாட்டோம் என்று கனடா மிக உறுதியாக இருந்து வருகிறது. இந்த நிலையில், ட்ரம்பின் இந்தக் கருத்து பரபரப்பை கிளப்பியுள்ளது. ட்ரம்ப் கூறுகையில் கோல்டன் டோம் கனடாவுக்கு பல பில்லியன் டாலர் செலவாகும், ஆனால் அது கனடா தன் இறையாண்மையை விட்டுக் கொடுத்தால் இலவசம் என்று கூறியுள்ளார். கனடா இந்த சலுகையை பரிசீலித்து வருகிறது என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

கடந்த வாரம் கனடா பிரதமர் மார்க் கார்னி கோல்டன் டோம் திட்டத்தில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டியதை அடுத்து ட்ரம்பின் கருத்து வந்துள்ளது.




**கோல்டன் டோம் வான் பாதுகாப்பில் கனடா இணைய பல பில்லியன் டாலர் செலவாகும். அமெரிக்கா உடன் இணையமாட்டோம் என்று கனடா மிக உறுதியாக இருந்து வருகிறது. ஆயினும் கனடா தன் இறையாண்மையை விட்டுக்கொடுத்தால் இலவசம் என ட்ரம்பின் கருத்து பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.**




**கனடா- அமெரிக்கா பாதுகாப்பு ஒப்பந்தம்:**

கனடாவின் இறையாண்மை குறித்த ட்ரம்பின் கருத்துக்களுக்கும் , கனடா 51வது அமெரிக்க நாடாக மாறக்கூடும் என்ற ஜனாதிபதியின் கூற்றை கனடா திட்டவட்டமாக நிராகரித்துள்ளது. கார்னியின் செய்தித் தொடர்பாளர் நாட்டின் இறையாண்மையை மீண்டும் வலியுறுத்தினார்.

கனடாவும் அமெரிக்காவும் ஏற்கனவே ஒரு பாதுகாப்பு ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளன. வட அமெரிக்க விண்வெளி பாதுகாப்பு கட்டளை. இதில் பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல்களைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகள் அடங்கும்.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் மற்றும் நீண்ட தூர பயண ஏவுகணைகள் போன்ற மேம்பட்ட அச்சுறுத்தல்களுக்கு எதிராக அமெரிக்காவைப் பாதுகாக்க விண்வெளியில் இடைமறிப்புகளை நிறுவ ட்ரம்பின் முன்மொழியப்பட்ட கோல்டன் டோம் அமைப்பு திட்டமிட்டுள்ளது. தனது பதவிக்காலம் முடியும் முதல் இந்தத் திட்டத்தை முடிப்பதாக ட்ரம்ப் உறுதியளித்துள்ளார்.

இதனைப் போலவே இஸ்ரேலின் பல அடுக்கு ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் "இரும்பு டோம்" என்று அழைக்கப்படுகின்றன. இது அமெரிக்காவின் கோல்டன் டோம்க்கு ஓரளவு ஈடாக செயல்படுகிறது. இஸ்ரேல் இந்த அதிநவீன அமைப்பை கணிசமான அமெரிக்க ஆதரவுடன் உருவாக்கியுள்ளது.

**விண்வெளி ஆயுதப் போட்டி அதிகரிக்கும் :**

சீனா, வட கொரியா மற்றும் ரஷ்யா அரசுகள் ட்ரம்பின் விண்வெளியில் ஆயுதங்களை வைக்கும் திட்டத்தை கடுமையாக விமர்சித்துள்ளன. சீனாவின் வெளியுறவு அமைச்சகம், இந்தத் திட்டம் விண்வெளி ஒரு போர்க்களமாக மாறும் அபாயத்தை அதிகரிக்கிறது, ஆயுதப் போட்டியை தூண்டுகிறது மற்றும் சர்வதேச பாதுகாப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளது.




அமெரிக்கா தனது சொந்த நலன்களை முதன்மையாகக் கொண்டுள்ளதுடன், அதன் சொந்த பாதுகாப்பைத் தேடுவதில் வெறித்தனமாக உள்ளது. இது எந்த நாட்டின் பாதுகாப்பும் மற்றவர்களின் இழப்பில் வரக்கூடாது என்ற கொள்கையை மீறுகிறது என்றும் கூறியுள்ளது.

மேலும் வட கொரியாவின் வெளியுறவு அமைச்சகமும் "அமெரிக்கா விண்வெளியை இராணுவமயமாக்கும் நடவடிக்கைகளில் உறுதியாக உள்ளது" என்று தெரிவித்துள்ளது.

ரஷ்ய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜகரோவா கூறுகையில் "கோல்டன் டோம் திட்டம் மூலோபாய ஸ்திரத்தன்மையின் அடித்தளத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. ஏனெனில் இது உலகளாவிய ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை உருவாக்குகிறது" என்று கூறியுள்ளார்.

ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனமான டாஸ் இன் படி, "கோல்டன் டோமை உருவாக்குவது ஏவுகணைகளை ஏவுவதற்கு முந்தைய அழிவு மற்றும் அவற்றின் பயன்பாட்டை உறுதி செய்யும் உள் கட்டமைப்பு வளர்ச்சிக்கு வழிவகுக்கும்" என்று ஜகரோவா மேலும் கூறியுள்ளார்.

இது ஏற்கனவே தடுப்பு, ஆனால் அடிப்படையில் முதல் தாக்குதல்களை வழங்குவதற்கான அமெரிக்காவின் மிகவும் ஆபத்தான கோட்பாட்டுப் போக்கின் நேரடி வெளிப்பாடாகும் என்று அவர் கூறியுள்ளார். இது விண்வெளியை ஆயுதமயமாக்கப்பட்ட சூழலாகவும், ஆயுத மோதலின் களமாகவும் மாற்றும் என்று எச்சரித்துள்ளார்.

**இஸ்ரேலின் அயர்ன் டோம்:**

அயர்ன் டோம் ) என்பது இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்பட்ட குறுகிய தூர வான் பாதுகாப்பு அமைப்பாகும். 2011 இல் செயல்படுத்தப்பட்ட இந்த அமைப்பு, முதன் முதலில் ஏப்ரல் 7, 2011 அன்று போரில் பயன் படுத்தப்பட்டது.

அயர்ன் டோம் இஸ்ரேலின் பல அடுக்கு ஏவுகணை பாதுகாப்பு அமைப்பின் ஒரு பகுதியாகும். கூடுதல் அடுக்குகளாக இஸ்ரேல் வான்பரப்பை பாதுகாத்து வருகின்றது. இந்த கூடுதல் அமைப்புகளானது நீண்ட தூரம் செல்ல கூடியவை. கப்பல் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகள் போன்ற பல்வேறு வகையான தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் திறன் கொண்டுள்ளன.

அயர்ன் டோம் 90 சதவிகித வெற்றி விகிதத்தைக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த அமைப்பை பயன்பாட்டிற்கு கொண்டு வந்ததில் இருந்து, 5,000 க்கும் மேற்பட்ட ஹிஸ்புல்லா தாக்குதல்களை இடைமறித்துள்ளது. இந்த அமைப்பிற்கு அமெரிக்கா வின் பேட்ரியாட் அமைப்பும் ஆதரவாக உள்ளது.

**அயர்ன் டோம் எப்படி வேலை செய்கிறது?**

அயர்ன் டோம் அமைப்பு மூன்று அம்சங்களை கொண்டுள்ளது. அதன்படி உள்வரும் வான்வழி அச்சுறுத்தல்களைக் கண்டறிதல், அவற்றின் தாக்கத்தின் சாத்தியமான புள்ளியின் மதிப்பீடு மற்றும் இடைமறிப்பு ஆகிய செயல்களை அந்த அமைப்பு முன்னெடுக்கிறது.

எதிரிகளால் ரொக்கெட் ஏவப்படும் போது, ரேடார் அமைப்பு ஏவுகணையை கண்டறிந்து கண்காணிக்கும். கட்டுப்பாட்டு அமைப்பானது ஏவுகணை எங்கு தரையிறங்கும் என்பதை மதிப்பிடும் மற்றும் அது இடைமறிக்கப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்கும்.

அதனடிப்படையில் தேவைப்பட்டால், எதிரிகளின் ஏவுகணையை இடைமறிக்க புது ஏவுகணையைச் செலுத்தும். ஒரு ஏவுகணை எந்தத் தீங்கும் செய்ய முடியாத இடத்தில் தரையிறங்கும் என மதிப்பிடப்பட்டால், அது தரையிறங்க அனுமதிக்கப்படும் எனவும் கூறப்படுகிறது. ●




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெமட்டகொட சமிந்தவுக்கு எதிரான வழக்கு விசாரணை டிசெம்பர் மாதம்

கொழும்பு, ஜூன் 01


போதைப்பொருள் கடத்தல் மூலமாக சம்பாதித்த 27 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான பணத்தை உதித் நிஷாங்க என்ற பெயரில் உள்ள வங்கிக் கணக்கின் ஊடாக பணப்பரிமாற்றங்கள் செய்து கொண்ட வழக்கின் இரண்டாவது சந்தேக நபராக மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவரும் போதைப்பொருள் கடத்தல்காரருமான தெமட்டகொட சமிந்த என அழைக்கப்படும் சமிந்த ரவி ஜயநாத் என்பவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் முதலாவது சந்தேக நபர் உதித் நிஷாங்க என்பவர் ஆவார்.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுல ரத்நாயக்க முன்னிலையில் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நீதிமன்றில் முன்னிலையான பொலிஸார், தெமட்டகொட சமிந்த - உதித் நிஷாங்க என்ற பெயரில் உள்ள வங்கிக் கணக்கின் ஊடாக பணப்பரிமாற்றங்கள் செய்து கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் இதனால் இந்த வழக்கின் இரண்டாவது சந்தேக நபராக தெமட்டகொட சமிந்தவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறினர்.

இதனைக் கருத்தில் கொண்ட நீதிவான் இந்த வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார். (எ)



# போதைப்பொருள் எதிர்ப்பு பிரசாரம், கொடி விற்பனை

சாய்ந்தமருது, ஜூன் 01

சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருதில் போதைப்பொருள் எதிர்ப்பு பிரசார நடவடிக்கையும் கொடி விற்பனையும் நேற்றுச் சனிக்கிழமை சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக்கால் சாய்ந்தமருது - 12 ஆம் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சமுர்த்தி சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல்.ஜபர் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் தொழிலதிபர் எம். யூ. நியாஸ், தலைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி.ஏ. நஜீம், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், நிதி உதவியாளர் ஏ.எம்.றியாஸ் உள்ளிட்ட அதிதிகள், சமுர்த்தி அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போதைப்பொருள் எதிர்ப்பு பிரசாரம் மற்றும் கொடி விற்பனை நிகழ்வுகள் சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் நேற்று மே 31 முதல் ஜூன் 17 வரை நடைபெறவுள்ளது.

இதன் ஓர் அங்கமாக போதைப்பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு எதிர்வரும் 04 ஆம் திகதி சாய்ந்தமருது வொலிவேரியன் கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் சகல பெண்களும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# சர்வதேச இடம்பெயர்வு அமைப்பின் பொறுப்பாளருடன் விசேட சந்திப்பு

கொழும்பு, ஜூன் 01

சர்வதேச இடம்பெயர்வு அமைப்பின் பொறுப்பாளர் கிறிஸ்ரின் பி பார்கோவுடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்து கலந்துரையாடினார்.

தோட்ட இளைஞர்கள் இடம்பெயர்வின் போது எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், அவர்கள் இடம்பெயரும் போது தேவையான உதவிகளை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிறிஸ்ரின் பார்கோவிடம் செந்தில் தொண்டமான் வலியுறுத்தினார். (எ)





# கண்டல் தாவரங்கள் நடுகை

திருகோணமலை, ஜூன் 01

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவின் சாம்பல் தீவு களப்பு பகுதியில் கண்டல் தாவரங்கள் நடப்பட்டன. சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம், பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் ரொற்ரரி கிளப் இணைந்து சாம்பல்தீவு களப்பு பகுதியில் நேற்று கண்டல் தாவர நடுகை நடைபெற்றது.

இதில் அரச திணைக்களத்தினர் மற்றும் ரொற்ரரி கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(எ)

# நகை திருட்டு தொடர்பில் மூன்று இளைஞர்கள் கைது

## 165, 000 ரூபாய் பணம் பறிமுதல்

திருகோணமலை, ஜூன் 01

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் கடந்த 29 ஆம் திகதி செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் தங்க நகை திருட்டு தொடர்பில் நடவடிக்கை எடுத்த பொலிஸார் 22, 25, 28 வயதுடைய மூன்று இளைஞர்களை நேற்று கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து திருடப்பட்ட தங்க நகைகள் மற்றும் அடகு வைக்கப்பட்டு பெறப்பட்ட 165, 000 ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (எ)



# அனைத்து தொழிலாளர்களும் உறுதிப்படுத்துவது கட்டாயம்

கொழும்பு, ஜூன் 01

வீட்டு வேலைக்கு அல்லாத தனிப்பட்ட ரீதியில் வெளிநாடு செல்லும் அனைத்து தொழிலாளர்களும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பதிவைப் பெறுவதற்கு முன்னதாக தாம் தொழில்புரிய உத்தேசித்துள்ள நாட்டின் இலங்கை தூதரகம், உயர்ஸ்தானிகராலயம் அல்லது துணைத் தூதரகம் ஆகியவற்றால் உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமாகும்.

வீட்டு வேலைக்கு அல்லாத வெளிநாடுகளுக்குச் செல்லும் போது தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் குறித்து ஆராய்ந்த பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கைத் தூதரகங்கள் இயங்காத நாடுகளுக்கு செல்வோர் குறித்த வேலைவாய்ப்பு ஒப்பந்தங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதான அலுவலகம், பணியக விமான நிலைய காரியாலயம் அல்லது மாவட்ட கிளை அலுவலகங்களில் அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

ஜூன் 7ஆம் திகதி முதல் இம்முறையானது நடைமுறைக்கு வரும் எனவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (எ)

# இனமோதலின் விளைவான...

(08ம் பக்கத் தொடர்ச்சி)

நகர்வை பிரதிபலித்து நிற்கிறது. தற்போதைய அரசியல் சூழ்நிலை பயனுறுதியுடைய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்பற்ற ஒரு வாய்ப்பை தருகிறது. அவநம்பிக்கை, அரசியல் துருவமயம், கடந்தகால நல்லிணக்க முயற்சிகளுக்கு இடையூறாக அமைந்த பொருளாதார உறுதிப்பாடின்மை ஆகியவற்றின் மரபை வெற்றி கொள்வதற்கான நேரம் வந்துவிட்டது.

புதிய அரசாங்கத்தை பதவிக்கு கொண்டுவருவதற்காக வாக்களித்தவர்கள் பொறுமையுடன் இருப்பதுடன் அரசாங்கம் ஆட்சிமுறையின் சவால்களுக்கு தன்னைப் பரிச்சியப்படுத்திக் கொளவதற்காக காலஅவகாசத்தை வழங்கவும் தயாராயிருக்கிறார்கள். ஆனால், இனநெருக்கடியைப் பொறுத்தவரை, தீர்வைக் காண்பது தொடர்பில் அரசாங்கம் தீர்க்கமான நடவடிக்கையை எடுப்பதற்கு இது சிறந்த தருணமாகும். அரசியலில் ஆதிக்கம் செலுத்திய தீவிரவாதிகளும் தேசியவாதிகளும் 2022 பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்த தவறான ஆட்சிமுறை மற்றும் ஊழல் மோசடிகளுடனான அவர்கள் தொடர்பு காரணமாக மதிப்புக் கெட்டிருக்கிறார்கள். மக்களின் நம்பிக்கையை அவர்கள இழந்துவிட்டார்கள்.

அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருப்பதுடன் மக்கள் அதன் மீது தொடர்ந்து நம்பிக்கையையும் வைத்திருக்கிறார்கள். அதனால் நிலைபேறான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இயலும். ஆறு மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்கள் அந்த மாகாணங்களுக்கு வெளியில் உள்ள தேசிய அரசியல் கட்சி ஒன்றுக்கு முன்னென்றும் இல்லாத வகையில் வாக்களித்திருந்தார்கள். அவர்களது பிரச்சினைகளை தீர்த்துவைப்பதில் காட்டப்படும் ஒவ்வொரு நாள் தாமதமும் குறுகிய இனத்துவ தேசியவாத சக்திகளை பலப்படுத்துகிறது. ●

# கொலையில் முடிந்த குடும்பப் பிரச்னை!

கொழும்பு, ஜூன் 01

வெல்லவாய பகுதியில் தாக்குதலுக்குள்ளான நபரொருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த நபர் தனது தாயை கோடரியால் தாக்க முயன்றதாகவும் கோடரியை அவரது கழுத்தில் வைத்ததாகவும் கூறப்படுகிறது.

இதைப் பார்த்த மருமகன் (மகளை மணந்தவர்) தடியொன்றை எடுத்து அவரைத் தாக்கியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் அந்த நபர் வீட்டுக்குள்ளேயே உயிரிழந்தார்.

உயிரிழந்த நபர் அதே பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

குறித்த நபர் தொடர்ந்து சண்டையிட்டு வந்ததாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் உயிரிழந்த நபரின் மைத்துனரான 45 வயதுடைய ஒருவரை பொலிஸார் கைது செய்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள்...

ரூபாவாகவும் உள்ளது.

95 ஒக்ரேன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 341 ரூபாவாகவும், 92 ஒக்ரேன் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 293 ரூபாவாகவும் உள்ளது.

இதேபோல், மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 178 ரூபாவாக மாற்ற மின்றி காணப்படுகிறது. (அ)

## இலங்கையை...

இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை இயற்கை வளங்களினால் நிறைந்த தன்னிறைவான நாடாக இருந்த போதிலும் முன்னைய ஆட்சியாளர்க ளின் திட்டமிடாத செயற்பாடுகள் காரணமாக நாட்டுக்கு அபிவிருத்தி கிட்டாமல் போயுள்ளது. தற்போதைய அரசாங்கம் படிப்படியாக நிலையான தாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கிறது.

நாம் ஒருபோதும் பதவிகளையும், பட்டங்களையும் எதிர்பார்த்துச் செய லாற்றவில்லை.

அனைத்து மக்களுக்காகவும் சுபீட்ச மான நாட்டை கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்புடன் உள்ளேன்.

சட்டத்தின் ஆட்சி உறுதி செய்யப் படும் அதேநேரம், சட்டம் அனைவ ருக்கும் பொதுவானதாகக் காணப்படும்.

எதிர்கால சந்ததியினரைப் போதைப் பொருள் பயன்பாட்டிலிருந்து முற்றாக விடுவிக்கும் பொறுப்பை உறுதியாக நிறைவேற்றி, சட்டவிரோத போதைப் பொருள் வியாபாரம் மற்றும் அதனுடன் இணைந்த குற்ற வலையமைப்புக்களை உடைப்பதற்கான நிறுவனக் கட்டமைப் பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது - என்றார். (அ)

## எங்கள்...

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கின்றோம். எதிர்க்கட்சி கள் எம்மை விமர்சித்தாலும் நாம் எமது பொறுப்புக்களை நிறைவேற்று வோம்.

எமது அரசாங்கம் எந்த வகையிலும் அரசியல் ரீதியாக நீதித்துறையில் தலை யிடுவதில்லை. சட்டம் அதனை கட மையை செய்துகொண்டிருக்கிறது.

தம்மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளவர்களே தற்போது அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டி ருக்கின்றனர். ஊழல்வாதிகள் தண்டிக்கப் படவேண்டும் என்று மக்கள் எதிர்பார்த் தனர். அந்த எதிர்பார்ப்பு நிறைவேற்றப் படுகிறது.

விமல் வீரவன்ஸ கூறும் பட்டியலில் உள்ளவர்களும், அந்தப் பட்டியலுக்கு அப்பாற்பட்டவர்களும் இனிவரும் காலங் களில் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். நீதிமன்றமே அதனை தீர்மானிக்கும்.

கம்மன்பில உள்ளிட்ட ஏனைய அனைவருக்கும் ஒரு விடயத்தைக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். ரணில் விக்கிரமசிங்கவுடனிருந்த ஹல்லொலு வவுக்கு என்ன நடந்து என்பது தெரிய மல்லவா?

இறுதியில் இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாகக் கூறி, நாடகமொன்றும் அரங்கேற்றப்பட்டது. வார்த்தை விளை யாட்டுக்களால் ரணில் விக்கிரமசிங்கவும் விசாரணையை எதிர்கொண்டார்.

எனவே, பழைய அரசாங்கங்களைப் போன்று இந்த அரசாங்கத்துடன் விளையாட முற்பட வேண்டாம் என எச்சரிக்கின்றோம். அவர்கள் கூறும் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் அவர் களே பொறுப்பு கூறவேண்டும்.

கம்மன்பில தொடர்பில் சட்டத் தரணியொருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடளித்திருக் கின்றார். ஊடகவியலாளர் மாநாடுகளில் கூறிக் கொண்டிருக்காமல் அவர்களும் சி.ஐ.டி.யில் முறைப்பாடளித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அரசாங்கம் என்ற ரீதியில் நாம் ஒருபோதும் அந்த விசாரணைகளில் தலையிடமாட்டோம்- என்றார். (அ)

## சீரற்ற...

எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறி யுள்ளார்.

இதேவேளை, பேரிடரால் ஊனமுற்ற ஒருவருக்கு ஒரு மில்லியன் ரூபாய் இழப் பீடு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## கொழும்பு...

கொழும்பு மாநகர சபையைக் கைப் பற்றினால் நாட்டின் முழு அதிகார மும் தங்கள் வசம் வரும் என்ற எண்ணத் துடன் ஐக்கிய மக்கள் சக்தி செயற்படு கின்றது.

அவர்களின் இந்தச் சிறுபிள்ளைத்தன விளையாட்டைப் பார்க்கும்போது சிரிப் புத்தான் வருகின்றது.

கொழும்பு மாநகர சபையில் அதிக ஆசனங்களைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியே ஆட்சி அமைக்கும். அதில் மாற் றுக் கருத்துக்கு இடமில்லை. பல சுயேச் சைக் குழுக்களின் உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவைத் தெரிவித் துள்ளன.

மேயர் தெரிவின்போது தேசிய மக் கள் சக்தியின் வேட்பாளர் வெற்றி வாகை சூடுவார்.

சஜித் அணியினர் எந்த வழியாலும் கொழும்பு மாநகர சபையின் ஆட்சி யைக் கைப்பற்ற முடியாது - என்றார். (அ)

## மருந்துகள்...

பெறுவதற்கு வெளிநாட்டு அரசாங் கங்களிடமிருந்து நேரடியாக உதவி பெற சுகாதார அமைச்சு திட்டமிட் டுள்ளது.

இதுகுறித்த பிரச்னைகளை தெளிவு படுத்தி சுகாதார அமைச்சினால் அமைச் சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட் டுள்ளது. அதனை அங்கீகரிக்கும்போது அமைச்சரவை வழங்கிய அறிவுறுத்தல் களின்படி, இலங்கை அரசாங்கம், பிற நாடுகளிலிருந்து மருந்துகளை நேரடியா கப் பெறுவதற்கான வழிமுறையின் கீழ் ஒரு முறையான குழுவை நியமித்து எதிர் கால நடவடிக்கைகளைத் தொடங்க திட்டமிட்டுள்ளது.

அந்த வழிமுறையின் கீழ், தேசிய கொள்முதல் அதிகாரசபையின் ஒப்பு தலைப் பெற்று, அமைச்சரவையிடம் மீண்டும் சமர்ப்பிப்பதற்கான ஒரு துரிதப்படுத்தப்பட்ட திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இதன் மூலம் நாட்டின் மருந்து விநியோக வலைய மைப்பை மீட்டெடுக்க முடியும்.

அதற்கமைய இந்த திட்டத்தை மேலும் செயல்படுத்த நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் மேம் பாட்டு அமைச்சு, வர்த்தகம், வணிகம், உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சு, வெளியுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் துறை ஆகிய அமைச்சகங்கள் மற்றும் நிறுவனங்களின் மூத்த அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவுக்கு சுகாதாரம் மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் தலைமை வகிக்கின்றார். இக்குழு சுகாதார அமைச் சின் செயலாளர் அனில் ஜாசிங்க தலை மையில் கூடியது.

அரசாங்கங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மூலம் நாட்டுக்கான மருந்துகளை கொள்முதல் செய்யும் திட்டத்தை எவ்வாறு தொடங்குவது மற்றும் எதிர்காலத்தில் அதை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்பது குறித்து நீண்ட கலந்துரையாடல் நடை பெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் தொடர்பு டைய ஆரம்ப நடவடிக்கைகளை விரைவாக முடித்து, இந்நாட்டு மக்களுக் குத் தேவையான மருந்துகள், மருத்துவ சாதனங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகளை தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவ டிக்கைகளை எடுக்க சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. (அ)

# நாட்டைவிட்டு தப்பிச் செல்ல முயற்சிக்கும் அரசியல்வாதிகள்

கொழும்பு, ஜுன் 01

சில அரசியல்வாதிகள் மற்றும் அவர்க ளது குடும்பத்தினர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிப்பதாக கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் அரசியல்வாதிகளும் அவர் களது நெருங்கிய உறவினர்களும் இவ் வாறு இரகசியமாக வெளிநாடு செல்ல முயற்சிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

புலனாய்வுப் பிரிவு தகவல்களின் அடிப்படையில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது. எனவே இந்த முயற்சியை தடுத்து நிறுத்தும் நோக்கில் பாது காப் புத் தரப்பினருக்கு விசேட அறிவுறுத்தல் கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்கள் பல்வேறு ஊழல் மோசடி கள் தொடர்பிலான விசாரணைகளுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப் படுகின்றது. வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப் படாதவர்கள் வெளிநாடு செல்ல எவ்வித தடையும் கிடையாது என தெரிவிக்கப் படுகின்றது.

வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப் பட்டவர்கள் கடல் மார்க்கமாக தப்பிச் செல்ல முயற்சிப்பதாக புலனாய்வுத் தக வல்களை மேற்கோள்காட்டி, குறித்த கொழும்பு ஊடகம் செய்தி வெளி யிட்டுள்ளது.

அண்மைய நாட்களாக கடந்த அர சாங்கங்களின் முக்கியஸ்தர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கிளிநொச்சியில்...

இதன்போது தாக்குதலுக்கு இலக் கான இளைஞன் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 28 வயதுடைய கந்த ராமி பிரணவன் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கிளி நொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேதபரிசோதனையின் பின்னர் உறவினரிடம் ஒப்படைக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## 2009இல்...

விடுத்திருந்தார்.

அவர் ஏன் இவ்வாறான வேண்டு கோளை விடுத்தார் என்ற பி.பி.சி செய்தி யாளரின் கேள்விக்கு பதிலளித்துள்ள பிளெச்சர், காஸாவில் பலவந்தமாக இடம்பெயரச் செய்தல் குறித்து தகவல் கள் கிடைக்கின்றன. பட்டினி குறித்து தகவல்கள் கிடைக்கின்றன. சித்திரவதை கள், பெருமளவு உயிரிழப்புகள் குறித்து தகவல்கள் கிடைக்கின்றன என தெரிவித் துள்ளார்.

இலங்கை,ருவாண்டா, ஸ்ரெப்ரெனி காவில் நாங்கள் (ஐ.நா) உரிய தருணத் தில் செயற்படவில்லை. உரிய தருணத் தில் எச்சரிக்கை விடுக்கவில்லை என உலகம் பின்னர் தெரிவித்தது என குறிப் பிட்டுள்ள அவர், அதன் காரண மாகவே ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக்கும் உலகிற்கும் நான் வேண்டு கோள் விடுத் தேன் எனக் குறிப்பிட்டார். (அ)

## புதிதாக...

பட்டுள்ளது என்று வைத்திய நிபுணர் ஜூட் ஜயமஹா கூறியுள்ளார்.

இருப்பினும், இந்த கோவிட் திரிபு குறித்து தேவையற்ற அச்சம் கொள்ள தேவையில்லை என அவர் வலியுறுத்தி னார்.

கர்ப்பிணித் தாய்மார்கள், முதிய வர்கள் மற்றும் நாள்பட்ட நோய் வாய்ப்பட்ட நோயாளர்கள் பாதிக்கப் படக்கூடிய குழுக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதால், முகக்கவசம் அணிவது மற்றும் நெரிசலான இடங் களைத் தவிர்ப்பது போன்ற சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது முக்கியம் என்றும் சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கோவிட் வைரஸின் புதிய திரிபுகள் அவ்வப்போது பரவுவதுடன், இது தொடர்பாக சுகாதாரத்துறை தொடர்ந்து விழிப்புடன் இருப்பதால் தேவையற்ற அச்சம் கொள்ள தேவையில்லை என வைத்திய நிபுணர் ஜூட் ஜயமஹா கூறினார்.

இதற்கிடையில், காலி தேசிய வைத் தியசாலையில் சமீபத்தில் இறந்த ஒன்றரை மாதக் குழந்தையும் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

குழந்தையின் உயிரியல் மாதிரியை கொழும்பு வைத்திய ஆராய்ச்சி நிறுவ னத்துக்கு பரிசோதனைக்காக அனுப்பிய பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப் பிட்டார். (அ)

## 76வருடங்களாக...

கொடுக்க வேண்டிய பணத்தைத் தமது சொந்த இன்பத்துக்காக தவறாகப் பயன் படுத்தியதற்காக இப்போது சிறைக்கு செல்ல வரிசையில் காத்திருக் கின்றனர்.

எமது அரசாங்கம் அந்த நிலையை மாற்றி, மக்களுக்கு திறைசேரியிலிருந்து உரிய நிவாரணத்தை வழங்கிவருகிறது. எமது பணிகளின் பிரதிபலனை மக்கள் விரைவில் அனுபவிப்பார்கள்.

அரசாங்கம் மீது போலி குற்றச்சாட்டு களை சுமத்துபவர்களுக்கு விரைவில் எமது சேவையின் பலன்கள் மக்களுக்கு கிடைக்கும்போது, அவர்களுக்கும் உரிய பதில் கிடைக்கும்-என்றார். (அ)

## தரம் 1...

உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போரால் இந்தப் பிரதேசங்கள் பாதிக்கப்பட்டது மாத்திரமல்ல, இந்தப் பாடசாலையும் பாதிக்கப்பட்டது. பல குடும்பங்கள் நாட்டை விட்டு வெளியே றும் நிலைமையும் ஏற்பட்டது.

மீள்குடியமர்ந்த பின்னர் இந்தப் பாட சாலையை முன்னேற்றுவதென்பது கடின மானதுதான். ஆனால், அதைச் செய்துள் ளார்கள்.

பாடசாலைகளின் வளர்ச்சி அந்தப் பாடசாலையின் அதிபரின் கையில்தான் தங்கியிருக்கின்றது. பாடசாலை அதிப ரின் தலைமைத்துவத்துக்கு பழைய மாண வர்கள், புலம்பெயர்ந்துள்ள பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எல்லோரும் ஒத்துழைப்புக் கொடுத்திருக்கின்றீர்கள்.

அவர்களைப் பாராட்டுகின்றேன். அதேபோல, பாடசாலையின் தலை மைத்துவமும் ஏனையோர் நம்பிக்கை கொள்ளும்படியாக வெளிப்படைத் தன்மையுடன் இருந்தமையால்தான் இவ்வளவும் சாத்தியமாகியிருக்கின்றது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சி என்பது கல்வியின் தரத்தை உயர்த்துவது மாத்தி ரமல்ல, மாணவர்களின் பண்புகளையும் மேம்படுத்துவதிலும் தங்கியிருக்கின்றது.

இங்கு கற்கின்ற மாணவர்கள் எதிர் காலத்தில் இந்தப் பிரதேசத்தின் வளர்ச் சிக்காக பங்காற்றவேண்டும்.

இன்றும் எங்கள் இளம் சமூகத்திடம் வெளிநாட்டு மோகம் தொடர்ந்தும் இருக்கின்றது. இங்கிருந்து முன்னேறு வோம் என்ற எண்ணம் இல்லை.

வடக்கில் உள்ளதைப்போன்று வளங் கள் வேறு எங்கும் இல்லை. இப்படியான வளங்கள் இருந்தும் நாம் அதனைப் பயன்படுத்தவில்லை.

முல்லைத்தீவைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை அண்மையில் நான் கௌரவித்திருந்தேன். அவர்கள் விவசா யத்தில் சாதித்தவர்கள்.

அவர்கள் இங்கிருந்து தம்மால் மிகச் சிறந்த தொழில்முனைவோராக வரமுடி யும் என்று கூறினார்கள். அப்படி இங்கி ருந்து சாதிக்க இளையோர் எதிர்காலத் தில் முனையவேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

## பஸ் மீது விழுந்த மரம்!

கொழும்பு, ஜூன் 01

நுவரெலியாவில், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் செல்வதற்காக நிறுத்தப்பட்டிருந்த தனியார் பஸ் மீது மரம் விழுந்ததினால் பஸ் பலத்த சேதம் அடைந்துள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹற்றன் - மஸ்கெலியா பிரதான வீதியில், நிவ்வெளி பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்களை ஏற்றிச் செல்வதற்காக, பிரதான வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பஸ் மீது மரம் விழுந்ததினால், போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

நேற்று முன் தினம் மாலை 6:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை வீதியில் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டிருந்தது.

மரம் முறிந்து விழுந்த நேரத்தில் பஸ்ஸில் யாரும் இல்லை எனவும், அதனால் பஸ் மட்டும் கடுமையாக சேதம் அடைந்துள்ளதாகவும் நோர்வூட் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

## இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டு குறித்து இந்த வருடத்தில் 1726 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூன் 01

இலஞ்ச மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் 1,726 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழலுக்கு எதிரான விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதில் முறைப்பாட்டுக் குழுவுக்கு 1,352 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவற்றுள் விசாரணை மேற்கொள்வதற்கான அனுமதி 200 முறைப்பாடுகளுக்கே கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

போதுமான ஆதாரங்கள் இல்லாததாலும், ஊழல் சட்டத்துக்குப் பொருந்தாமை தொடர்பிலும் 450 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்தக் காலகட்டத்தில் இலஞ்சம் தொடர்பில் 24 வழக்குகளும், ஊழல் தொடர்பில் 07 வழக்குகளும், சட்டவிரோதமாக சொத்துக்களை ஈட்டியமை குறித்த 02 வழக்குகள் அடங்கலாக 33 வழக்குகளை ஊழலுக்கு எதிரான ஆணைக்குழு மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. (அ)

## வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் சுருக்குவலை தொழில் அதிகரிப்பு

### அப்பகுதி மீனவர்கள் கவலை

யாழ்ப்பாணம், ஜூன் 01

வடமராட்சி கிழக்கு கடலில், சட்டவிரோத சுருக்கு வலை தொழில் காரணமாக, அதிகளவான மீனவர்கள் தொழிலை இழந்துள்ளனர்.

நாளாந்தம் சுருக்குவலை தொழிலுக்கு செல்லும் அதிகளவான படகுகள், 50 ஆயிரம் கிலோவுக்கும் அதிகளவான மீன்களை பிடித்து வருவதனால் சிறு தொழிலாளர்கள் வருமானத்தை இழந்துள்ளதாக மீனவர்கள் கவலை வெளியிட்டனர்.

சுருக்குவலை தொழிலில் அதிகளவான மீன்கள் கிடைப்பதனால் சிறு தொழிலாளர்கள் பிடிக்கும் மீன்களின் விலை சந்தைகளில் குறைந்துள்ளது.

இதனால் அதிகளவான மீனவர்களின் படகுகள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்வதை நிறுத்தியுள்ளதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

அதனால் சுருக்கு வலைத் தொழிலை கட்டுப்படுத்த கடற்தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வடமராட்சி கிழக்கு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## சிக்குன்குனியா பரவும் வேகம் அதிகரிப்பு!


கொழும்பு, ஜூன் 01

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சிக்குன்குனியா பரவும் வேகம் அதிகரித்து வருவதாக சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவானோர் சிக்குன்குனியாவினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுரந்த பெரேரா தெரிவித்தார். (அ)

# தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் பதவிப்பிரமாணம்



யாழ்ப்பாணம், ஜூன் 01

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவாகியுள்ள தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் உள்ள தனியார் விருந்தினர் மண்டபம் ஒன்றில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான, கருணைநாதன் இளங்குமரன், சண்முகநாதன் சிறிபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன், உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் குறித்து அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 01

இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகள் மற்றும் நபர்களின் பெயர்களை அறிவித்து புதுப்பிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்யகொந்தாவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

15 அமைப்புகள் மற்றும் 217 நபர் களின் பெயர் விவரங்கள் அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலக தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம், கனேடிய தமிழர் தேசிய அவை மற்றும் டி.வை.ஓ என அறியப்படும் தமிழ் இளைஞர் அமைப்பு ஆகியன இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் எச்சியூ என்று அறியப்படுகின்ற தலைமையகக் குழு, தேசிய தௌஹீத் ஜமாத், ஜமாதே மிலாதே ஈப்ராஹிம், விலயாத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்துபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ள்ஸ் ஆகியனவும் இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. பயங்கரவாதத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் காரணமாகக் குறித்த அமைப்புகள் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# காணாமற்போனோரின் உறவினர் முல்லைத்தீவில் நேற்று போராட்டம்!

முல்லைத்தீவு, ஜூன் 01

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், இன்று, மாங்குளத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், கடந்த 2017 மார்ச் மாதம் எட்டாம் திகதி முதல் ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று 3 ஆயிரத்து 7 ஆவது நாளை அடைந்துள்ள நிலையில் நேற்று காலை மாங்குளம் நகரில் போராட்டம் நடத்தப்பட்டது.

தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வரும் மக்கள், மாதந்தோறும் மாபெரும் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தவகையில், முல்லைத்தீவு மாவட்டத்திலே மேற்கொள்ளப்படுகின்ற இந்த போராட்டத்தை தொடர்ச்சியாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்ளத் தீர்மானித்திருந்தனர்.

அதற்கமைய துணுக்காய், மாந்தை கிழக்கு, மாங்குளம் பகுதிகளைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து நேற்று காலை மாங்குளம் நகரில் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள்,பொது மக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (அ)

### தங்க நகைகள் விற்பனை போர்வையில்

# ரூ. 210 மில்லியன் கொள்ளை இருவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூன் 01

தங்க நகைகளை விற்பனை செய்யும் போர்வையில் கண்டி, வெலம்பொட பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் நுழைந்து வீட்டின் உரிமையாளரை தாக்கி 210 மில்லியன் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்களை எதிர்வரும் 06ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கம் பளை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்ப வம் கடந்த 08ஆம் திகதி இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் சட்டத்தரணிகள் ஊடாக நேற்று நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இரத்தினபுரி, எம்பிலிப் பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 41 மற்றும் 52 வயதுடைய இருவரே இவ்வாறு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேல திக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org